உ

முருகன் துணை.

# மகா குருபூஜை மலர்

# இஷ்டலிங்க அபிஷேக மாலை

பழைய உரையுடன்.

யிலம் - பொம்மபுரம் ஆதீனம்

1-10-65

T11058

R003I01

உ

சிவமயம்.

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க.

பதினெட்டாம் பட்டம்

## ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் மகா சந்நிதானம்

# மகா குருபூஜை மலர்

ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய

## இஷ்டலிங்க அபிஷேக மாலை

பழைய உரையுடன்

மயிலம் - பொம்மபுர ஆதீனம்

1—10—65.



பத்தொன்பதாம் பட்டம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்.

உ

முருகன் துணை,

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க.

திருக்கயிலாய பரம்பரைப் பொம்மையபாளையம் பெரியமடம்
சிவகஞ்சி மயூராசல நிவாச யதீச்சுர கர்த்தரான மயிலம்
தேவஸ்தான ஆதீன பரம்பரைத் தர்மகர்த்தத்துவம்,
பத்தொன்பதாம் பட்டம்

## ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
## மகா சந்நிதானம் அருளிய

# ஆசி மொழி.

இறைவன், உயிர்கள் இம்மையின்பங்களைத் துய்த்து மறுமையில் எல்லையிலாப் பெருவாழ்வை எய்தித் தன் திருவடி இன்பமாரத் தகுந்த சாதனங் களையெல்லாம் இவ்வுலகில் படைத்தான். ஆனால் பல்லுயிர்கள் கதிபெருது கழிந்தன. உயிர்கள் செல்கதி அறிந்து உய்யவேண்டி இறைவனே ஆசாரியர்களை அவதரிக்கச் செய்தான். ஆசாரியர்கள் உயிர்களுக்கு இம்மைக்கு வேண்டிய உணவும் உறையுளும் தந்து மறுமைக்கு வேண்டிய ஞானசாதன வழிகளையும் மடாலயங்கள் மூலம் நல்கினர்.

வீரசைவப் பெருங்கொள்கையை மேற்கொண்டு, இறைநெறியால் எல்லாரும் பிணைப்புண்டு, பேரின்பப் பெருவாழ்வு பெற ஏற்பட்டதே மயிலம் - பொம்மபுரம் ஆதீனம். இத்திருமடாலயத்தில் பதினெட்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் ஞான நிலய மாக விளங்கி சமயம், மொழி, நாடு என்ற வகையில் பல்பெரும் பணிகளைச்செய்து இஷ்டலிங்க பரசிவத் திற் கலந்தார்கள். அவர்கள் தங்களது கொள்கை களை நாட்டிடையே நிறைவேற்ற அடியேனைக் கருவி யாக்கிக் கொண்டார்கள்.

செம்மையாக வழிபாடு செய்வதே இறையருள் பெற உரிய சாதனம் என்னும் அவர்கள் கொள்கைக் கேற்ப பூஜா தத்துவங்களை விளங்க அறிவிக்கும் இம் மடத்துச் சீடராகிய ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அரு ளிய இஷ்டலிங்க அபிஷேகமாலை பழைய உரையுடன் மகா குருபூஜை மலராக வெளிவருகிறது.

உலகெலாம் அன்பும் தண்ணளியும் நிறையவும், ஞானம் மலரவும் மயிலம் முருகப்பெருமான் திருவரு ளும், ஆதி ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் திருவரு ளும், மகா குருபூஜை கொண்டருளும் பதினெட்டாம் பட்டம் சுவாமிகள் திருவருளும் நிறைவதாக,



திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
**ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்**
18-வது பட்டம்

முருகன் துணை,

## மயிலம் - பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டம்

# ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

'பாரத நாடு பழம் பெரும் நாடு பாரினில் அதற்கு ஈடு இல்லை' என்றார் கவிஞர். எதனால் பாரதநாடு அவ்வாறு சிறப்பிக்கப்பெறுகிறது? மக்கள் வாழ்க்கையின் பயனாக உள்ள இறைநெறி எனப்படும் சமயக்கொள்கையைப் பல்வேறு வகையான பாங்கில் போற்றிக் காத்துவரும் உயர்வு நலத்தாலே தான். இந்தியப் பெருநாட்டைத் தத்துவ விளைநிலம் என்று போற்றுவர். இந் நாட்டில் முளைத்தெழுந்து மணம் பரப்பிய தத்துவங்கள் பல; அவற்றுள் வீரசைவம் என்பது பழம் பெருங்கொள்கை.

கொள்கையளவில் தொன்மையும் உயர்வும் பொருந்திய இப்பெருநெறி பிரசார அளவில் சிறப்புப் பெற்றுப் பரவியது பசவண்ணர் காலத்தேதான். கலியாணபுரியை ஆண்ட பிஜ்ஜளன் (விச்சலன் என்ற சமண அரசன் என்று நூல்களில் கூறப்பெறுவான்) என்ற வேந்தனின் முதல் அமைச்சரே பசவண்ணர். பிறப்பால் பிராமணராயினும் வீரசைவத்தின் அருமை பெருமைகளை அறிந்து அதனைத் தமது பெருங்கொள்கையாக மேற்கொண்ட அவர், தமக்கு இருந்த பதவியாலும், செல்வாக்காலும் பக்தியாலும், வன்மையாலும், வீரசைவத்தைத் தாம் ஆண்ட கன்னடநாட்டில் எங்கும் விரைந்து பரவச் செய்தார். இன்று அதிகமாக வீரசைவர்கள் வாழும் பகுதி கன்னட நாடாகிய மைசூர் மாநிலமே. (இன்றைய மைசூர் மாநில முதன் மந்திரி ஸ்ரீநிஜலிங்கப்பா அவர்களும் வீரசைவரே)

வீரசைவம் என்றால் என்ன? வீரசைவம் வீராகமம் என்னும் ஆகம நெறியாகும். கைத்தலத்தில் இலிங்கத்தை வழிபாடாற்றும் பெருமை உடையது. 'பிரபஞ்ச நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் மூல காரணமாய் நின்று ஆட்டுவிப்பது இறைவன் அருட்சத்தியே; வேறு ஒன்றும் காரணம் இல்லை' என்னும் கொள்கையுடையது. அங்கத்திலே இலிங்கத்தைத் தரித்துக்கொண்டு அவ்விட்ட லிங்கத்தையே வழிபடும் இயல்பு பொருந்தியது. வீரசைவர்கள் பக்தி முறையைப் பெரிதும் போற்றுவர்.

குரு, லிங்கம், சங்கமம், பாதோதகம், பிரசாதம், விபூதி, உருத்ராட்சம், மந்திரம் என்னும் எட்டும் வீர சைவர்களுக்கு மிகவும் முக்கியமானவை. உயிருக்கு எவ்வகையான தீங்கும் நேராமல் இவ்வெட்டும் காப்பன ஆதலின் இவற்றைக் கோட்டை என்னும் பொருளில் அஷ்டாவரணம் என்று வழங்குவர். இலிங்காசாரம், சதாசாரம், சிவாசாரம், பிருத்தியாசாரம், கணாசாரம், என்னும் ஐந்தாகிய ஒழுக்க நெறிகளைப் போற்றுவர். (இவற்றைப் பஞ்சாசாரம் என்பர்) உணர்ச்சியும், முயற்சியும், அறிவும், இயற்கையுணர்வும், செயலும், ஒன்றுபடுத்தலும் ஆகிய அறுவகைப் பெருநிலைகளைச் சடுத்தலத்தால் பெற்று இலிங்காங்க சமரச நிலையுணர்தலே வீரசைவர்களது பெரும் பேருகும்.

இத்தகைய வீரசைவம் என்னும் பெருநெறி கன்னட நாட்டிலே கால்கொண்டதாயினும் தமிழ் நாட்டிலேயும் படர்வதாயிற்று. அங்ஙனம் சிறந்து நின்ற அக்கொள்கையைப் போற்றிக் காத்து வருகின்ற தமிழ் வீரசைவப் பெருமடங்கள் பல. கும்பகோணம் பெரிய மடம், போரூர் சிதம்பர சுவாமிகள் மடம், பேரூர் சாந்தலிங்க சுவாமிகள் மடம், விருத்தாசலம் குமாரதேவர் மடம், திருக்கோவலூர் ஞானியார் மடம் (திருப்பாதிரிப்புலியூர்) என்பன அவற்றுள் சில. இப்பெரு மடங்கள் பலவற்றுக்கு நாயகமாய் அவற்றுக் கெல்லாம் தாயகமாகவும் விளங்கும் பெருமை பொருந்தியதே மயிலம்–பொம்மபுரம் ஆதீனம் என்று சிறப்பித்துக் கூறப்பெறுகின்ற பொம்மைய பாளையம் பெரிய மடம்.

பாண்டிச்சேரியிலிருந்து சென்னை நோக்கிச் செல்லும் ஐந்தாவது கல்லில் பொம்மைய பாளையம் விளங்குகிறது. இங்கே ஆதீனகர்த்தராக விளங்குபவர்கள் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள். திருக்கயிலையில் சிவபிரான் திருவிளையாட்டால் கணத்தலைவர்களில் ஒருவராய சங்குகன்னர் என்பார் உலகில் அவதாரம் செய்தார். விபூதி, உருத்திராக்க இலிங்கதாரியாய்ப் பாலவடிவோடு பொம்மபுரத்தையடுத்த கடலிலே தோன்றிக் கரையேறிச் சித்துக்கள் பலசெய்தமையால் பாலசித்தர் என்று அழைக்கப் பெற்ருர். அவர்கள் 1000 ஆண்டுகளுக்குமேலாக விளங்கி மயிலம் என்னும் மலைமீது அமர்ந்து தவம் செய்து தம்பால் வந்து சேர்ந்த வள்ளி தெய்வயானை

யரை முருகப்பெருமானுக்கு மணம் செய்து கொடுத்துத் திருமணக் காட்சிகண்டு திருக்கயிலைக் கெழுந்தருளினார்கள்.

இவர்கள் பால் உபதேசம் பெற்ற சிவஞானி என்பார் இத்திரு மடத்தின் இரண்டாவது பட்டத்து சுவாமிகள். அவர்கள் செஞ்சியை ஆண்ட திரியம்பக மன்னனின் மகளது நரைத்த கூந்தலைக் கருங்கூந்த லாக்கியது, மந்திரவாதியை அடக்கியது முதலாய அரிய பல சித்துக் களைச் செய்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு நிலவினார்கள் என்று திருமட வரலாறு கூறும்.

அந்த சுவாமிகளை ஞானாசாரியராகக்கொண்டு பாமாலை புனைந்து வழிபட்டவரே பதினேழாம் நூற்றாண்டில் விளங்கிய கவிதா ரத்தின சிகரமாகிய சிவப்பிரகாச சுவாமிகள். வீரசைவ விளைநிலமாகிய பிரபுலிங்கலீலையும், சித்தாந்த சிகாமணியும் இவர்களது படைப்பே. சுவைக்கத் தேனூறும் கற்பனைவளம் நிறைந்த கவிதை பொழிந்த வீரசைவ ஞான பானுவாகிய சிவப்பிரகாச சுவாமிகள் சிவஞான பாலய சுவாமிகள்மீது நெஞ்சுவிடுதூது, கலம்பகம், பிள்ளைத்தமிழ், தாலாட்டு திருப்பள்ளியெழுச்சி என்னும் ஐம்பெரு நூல்களை எழுதினார்கள் இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகர், அவர்கள்மீது பாச வதைப் பரணி என்னும் பிரபந்தம் பாடினார்.

இரண்டாம் பட்டத்து சுவாமிகளுக்குப் பின் பதினைந்து பட்டங் கள் அருளாட்சி நடத்தி வீரசைவத் திருமடத்தை வளர்த்தும், மயிலம் முருகப்பெருமான் தேவஸ்தானத்தைப் பரிபாலித்தும் சென்ற பின், பதினெட்டாவது பட்டமாகத் தற்போது இட்டலிங்க பரசிவத்திற் கலந் தருளிய சுவாமிகள் எழுந்தருளினார்கள்.

எல்லையில்லாத பெருநலம் செறிந்த உலகபுருடனின் இதயத் தானமாகிய தில்லையம்பதியில் வீரசைவ குலதிலகராகிய ஸ்ரீ கந்தசாமி அய்யரவர்களுக்கும் சென்ன வீரம்மாளுக்கும் அருந்தவப் புதல்வ ராகத் (17--7--1894) திருவவதாரம் செய்து, குமாரசாமி என்னும் பிள்ளைத்திருநாமம் கொண்டிருந்த இவர்கள், தமிழ், தெலுங்கு, வட மொழி மூன்றையும் கற்றுத் தேர்ச்சி பெற்றதோடன்றித் தற்காலத் தேவைக்கு ஏற்ற வகையில் ஆங்கிலமும் அறிந்தார்கள். பின்னர் 17-வது பட்டத்துச் சுவாமிகளின் பூர்வாசிரம புதல்வியாகிய

அகிலாண்டம்மையை மணந்து இல்லற மாற்றிப் பங்கஜம் என்னும் புதல்வியும், ஸ்ரீ சிவசுப்பிரமணியம், ஸ்ரீ சிவப்பிரகாசம் என்னும் புதல்வர்களும் ஆய நன்மக்கட்பேற்றையும் எய்தினுர்க்ள். இந்நிலையில் இவர்கள் பிப்ரவரிமீ 1928–ல் பதினெட்டாவது பட்டத்துச் சுவாமிகளாக அருட்செங்கோல் தாங்கி 37 ஆண்டுகளாக வீரசைவம், முருகன், தமிழ் ஆகிய மூன்றையும் புரந்தார்கள்.

தாய்மொழியைப் பரவச் செய்வதே தலையாய கடமை என்று கருதிய சுவாமிகள் சைவத்தோடு தமிழ்வளர 14–7–1938–ல் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி என்னும் தமிழ் நிலயத்தைத் தோற்றுவித்தார்கள். மடாலயங்கள் சார்பில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட முதல் தமிழ்க்கல்லூரி இதுவே. இது மடாலயங்கள் கல்விப் பணியில் முழுமூச்சாக ஈடுபடுவதற்கு ஒரு வித்தாகவும் அமைந்தது. தமிழ்க் கல்வியோடு சமயவுணர்வும் கலந்து பெற்ற மாணவர்கள் 500 பேருக்குமேல் தமிழ்நாடெங்கும் உள்ள கல்வி நிலயங்களில் தமிழ்ப்பணி செய்கிருர்கள். "தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்தல் வேண்டும்" என்னும் பாரதியின் கனவைச் சுவாமிகள் நனவாக்கி வைத்தார்கள் என்று சொல்லலாம். தமிழ்க்கல்லூரியோடு மட்டுமன்றி மயிலம் திருமுருகன் தேவஸ்தான சார்பில் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் உயர்நிலைப்பள்ளி ஒன்றும், ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி உயர்நிலைத் தொடக்கப்பள்ளி ஒன்றும் நடாத்திவருகின்றனர்.

எப்பொழுதும் நூல் ஆராய்ச்சி செய்தலும், புலவர் பெருமக்களோடு அளவளாவுதலும், நூல்களைப் பிறர் படிக்கச் சொல்லிக் கேட்டலும் பொழுது போக்காக உடையவர்கள் சுவாமிகள். வைகாசிமீ பௌர்ணமியில் நடைபெறும் இரண்டாவது பட்டத்துச் சுவாமிகளது குருபூசைத் திருநாளில் புலவர் பேரவையைத் திறம்பட நடத்திச் சன்மானம் வழங்குவார்கள். மலரைச் சுற்றும் வண்டெனப் புலமை நலம் நுகர்ந்து இன்புறும் சுவாமிகளைப் புலவர்கள் எப்பொழுதும் சுற்றியிருப்பர்.

வீரசைவம் என்னும் தமிழ் இதழுக்கு ஆதரவு தந்தும், வீரசைவ சித்தாந்த சங்கத்தை நடாத்தியும், வீரசைவர்களிற் பலரை ஆதரித்துத் தமிழ்ப் புலவர்களாகச் செய்தும் வீரசைவ சமயத்தை வளர்த்தார்கள்.

மயிலம் முருகப்பெருமான் திருக்கோயில் சோடசோபசார தீபா ராதனைப் பொருள்கள் அனைத்தையும் வெள்ளியால் செய்தார்கள். வெள்ளி வாகனங்கள் பலவற்றை அமைக்க ஏற்பாடு செய்தார்கள். திருவாபரணங்கள் பல செய்தார்கள். திருக்கோயிலுக்கு நிறைந்த விளை நிலங்களைச் சேர்த்தார்கள். தாம் பட்டத்திற்குவந்த முத லாண்டே திருத்தேர் செய்து தேர்விழா நடத்தினார்கள். இவ்வகை யில் திருக்கோயிலுக்குப் பணியாற்றினார்கள்.

சுவாமிகள் தமிழார்வத்தால் இடையறாது நூற்பதிப்புக்களில் ஊக்கம் செலுத்தி வந்துள்ளார்கள். கற்பனைக் களஞ்சியம், வற்றா ஊற்றாகிய தமிழ்ப்பெருநிதி சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத்திரட் டைப் பதிப்பித்து வழங்கினார்கள். சுவாமிகள் காலத்தில் பதினைந் துக்கு மேற்பட்ட தமிழ் நூல்கள் திருமடத்திலிருந்து வெளியிடப் பெற்றன. பிரபந்தத்திரட்டு ஒன்றிலேயே முப்பத்திரண்டு பெருநூல் கள் அடங்கியுள்ளன என்றால் சுவாமிகளது தமிழார்வத்துக்கு எல்லை யுண்டோ!

அம்மட்டோ! சுவாமிகள் தமிழ் நாடெங்கணும் சென்று மாநாடு களில் கலந்து மக்களுக்கு அருளாசி வழங்கினார்கள். சேவேறும் பெருமானைச் சிந்தைவைத்த நாவீறுபடைத்த சுவாமிகளுக்கு இசை யில் பெரிதும் ஈடுபாடு உண்டு. அவர்களே பல ராகங்களைப் பாடிக் காட்டுவார்கள். சென்னைச் சர்வகலாசாலையில் பல்கலைக்கழக வேந்தர் திரு. இலக்குமணசாமி முதலியார் அவர்களைத் தலைவராகக் கொண்டு நடந்த சேக்கிழார் பிள்ளைத்தமிழ் உரை வெளியீட்டில் கலந்துகொண்டு அருளாசி வழங்கியபோது சுவாமிகள் பாக்களைப் பாடியது கேட்டு அப்பேரவை விம்மிதத்தில் ஆழ்ந்தது சுவாமிகள் மயிலம் முருகன் — தேவஸ்தான சார்பில் தேவார பாடசாலை வைத்து நடத்துவது ஈண்டு குறிக்கத் தக்கதாகும்.

செய்யுட்களை மனனம் செய்தல், இசையுடன் பாடுதல், பொருளறி தல், உரையாடுதல், சொற்பொழிவு ஆற்றல், சிறந்த சொற்பொழிவு களை அயராது கேட்டல் என்னும் இவையே புலமைக்கு வித்து என்பது சுவாமிகளின் அருட்கருத்து. சுவாமிகளே சொற்பொழிவு மணிக்கணக்காக நடந்தாலும் முழுதும் அமர்ந்து கேட்டார்கள்.

அண்மையில் ஒரு திங்களுக்குமேல் வடநாட்டு யாத்திரை சென்று ஸ்ரீசைலம், ரிஷிகேசம், காசி முதலிய தலங்களை வழிபட்டார்கள்.

சுவாமிகளது வாக்கும், அவர்களது வாழ்க்கையும் மலரும் மணமும்போல் அமைந்தவை. எப்படிப் பிறர் நடக்கவேண்டும் என்று சொல்லுவார்களோ அந்நெறியில் தாங்களே நடந்துகாட்டுவார்கள். தவச் செம்மலாகவும், ஞான ஊற்றாகவும், தமிழ்ப்பெருங் கடலாகவும், கருணை மாமழையாகவும், அருளொளியாகவும், புகழ்மலையாகவும் விளங்கிய பதினெட்டாம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானபாலய சுவாமிகள் 21--9--65 செவ்வாய்க்கிழமை இட்டலிங்க பரசிவத்திற் கலந்தருளினார்கள்.

சுவாமிகளது தவப்புதல்வராய திரு. சிவப்பிரகாசம் அவர்கள் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் மடாலய முதல்வராக இருந்தவர்கள். மயிலம் ஸ்ரீமத் சிவஞானபாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி மதிப்பியல் முதல்வர். தமிழ்ப் புலமையில் தேர்ச்சிபெற்று விளங்குகிறார்கள். ஆங்கிலத்திலும் வல்லவர்கள். பல ஆண்டுகளாகவே சுவாமிகளுக்கு உறுதுணையாகத் திருமடம், மயிலம் ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி தேவஸ்தானம் ஆகியவற்றின் நிர்வாக காரியங்கள் அனைத்தையும் கவனித்து வருகிறார்கள். புலவர்கள், பெருமக்கள், தலைவர்கள், மடாலயத் தலைவர்கள் ஆகியோரது அன்புக்கும், பெருமதிப்பிற்கும் பாத்திரமானவர்கள். பத்தொன்பதாம் பட்டமாக அருளாட்சி நடத்த எழுந்தருளியுள்ளார்கள்.

அவர்களது திருவருள் வழியில் நாடெல்லாம் உய்ந்து வீரசைவப் பெருநலமும், முருகப்பெருமான் அருள்நலமும், தமிழ்நலமும் உலகெலாம் பரவ இறையருளை வந்தித்து வழுத்திச் சிவஞானபாலய சுவாமிகளது இணையடிகளை வணங்குவோமாக.

சிவமயம்.

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க.

## விநாயகர் துதி.

1. சுரகு லாதிபன் தூய்மலர் நந்தனம்
பெருக வார்கடல் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரணம் நாளும் தலைக்கணி யாக்குவாம்.

2. குவளத் தந்தக் குளிர்விண் வளத்துறக்
கவளத் தந்தக் கரணம் இருத்திய
பவளத் தந்தப் படிவநிகர்த்து ஒளிர்
தவளத் தந்தத் தலைவனை வாழ்த்துவாம்.

## சிவபெருமான் வணக்கம்.

3. பூவாய் நெடுங் கோட்டு உறுபசுந்தேன்
கைகான் முடங்கு பொறியிலிதன்
நாவாய் ஒழுகிற்று என உலகம்
அளந்த மாலும் நான்முகனும்
காவாய் என நின்று ஏத்தெடுப்பத்
தானே வந்து எம் கரதலத்தின்
மேவா அமர்ந்த மாமணியைத்
தொழுது வினைக்கு விடைகொடுப்பாம்.

## உமாதேவியார் வணக்கம்.

4. வன்னிகரம் வளர்வுற நற்பணி பயில
வருவார்க்குச் சுவர்க்கம் ஈந்து
பன்னுநுதன் மதியடியார் பரிபுரங் கொண்டு
எழிற்கனிமெல் லிதழி யாரப்
பொன்னணுகு மலரவை சேர்ந்து இசைகொளரி
மறையோதி புரிந்து தாழத்
தன்னையிடத்து இருத்துபரம் பொருளைநிகர்
உமையம்மை சரணிற் றாழ்வாம்.

## சுப்பிரமணியர் துதி.

5. பாகம் ஒருபெண் குடியிருக்கும்
பரமன் அணியில் பரித்தமணி
நாகம் நுழைவுற்று உடல் சுருண்டு
கிடந்து நகுவெண் தலைப்புழையில்
போக மெல்லத் தலை நீட்டிப்
பார்த்து வாங்கப் போகும் ஒரு
தோகை மயில் வாகனப் பெருமாள்
துணைத்தாட் கமலம் தொழுதிடுவாம்.

## திருஞானசம்பந்தர் துதி.

6. வல்லார் பிறப்பு அறுப்பர் வண்மைநலம் கல்வி
நல் ஆதரவு இன்பம் ஞானங்கள்—எல்லாம்
திருஞான சம்பந்தன் சேவடியே என்னும்
ஒரு ஞான சம்பந்தம் உற்று.

## திரு நாவுக்கரசர் துதி.

வீட்டிற்கு வாயில் எனும் தொடை சாத்து சொல்வேந்த பொது
ஆட்டிற்கு வல்லன் ஒருவற்கு ஞான அமுது உதவி
நாட்டிற்கு இலாத குடர்நோய் நினக்குமுன் நல்கினும்என்
பாட்டிற்கு நீயும் அவனும் ஒப்பீர் எப்படியினுமே.

## சுந்தரர் துதி.

8. அறிந்து செல்வம் உடையானும் அளகைப்
பதியான் தோழமை கொண்டு
உறழ்ந்த கல்வி உடையானும்
ஒருவன் வேண்டும் என இருந்து
துறந்த முனிவர் தொழும் பரவைத்
துணைவா! நினைத் தோழமை கொண்டான்
சிறந்த அறிவு வடிவமாய்த்
திகழும் நுதற்கண் பெருமானே.

## மாணிக்கவாசகர் துதி.

9. செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப !
பாவெனப் படுவது உன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே.

## அல்லமதேவர் துதி.

10. கலையை மதிக்கும் புலவர்தமைச்
சித்தர் குழாத்தைக் கடவுளரை
நிலையை மதிக்கும் முனிவரரைத்
திசைமா முகனை நிரைவளையாச்
சிலையை மதிக்கும் நெடியோனை
விழுங்கி உமிழாத் திறல் மாயை
தலையை மிதிக்கும் அல்லமன்செங்
கமல மலர்த்தாள் தலைக்கு அணிவாம்.

## வசவர் துதி.

11. வெள்ள வேணிப் பெருந்தகைக்கு
யாம் செய்யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்து இருந்த
கள்வர் எல்லாம் களங்கம் அறும்
உள்ளமோடு மெய்யடி யார்
ஆக உள்ளத்து உள்ளும் அருள்
வள்ளல் ஆகும் வசவேசன்
மலர்த்தாள் தலையால் வணங்குவாம்.

## அடியார் பொது துதி.

12. பரவை கேள்வன் திருத் தொண்டத்
தொகையுள் அடியார் பத்தி எலாம்
உருவ மாகும் நம் சோம
நாதன் துதியுள் உறுசரணர்

அரவ அணியான் அடியார்கள்
மற்றையவர்கள் அனைவரும்தாம்
விரவி நாளும் இருப்ப இடம்
கொடுக்கும் உள்ளம் விரிந்தன்றே,

**சிவஞான பாலய சுவாமிகள் துதி.**

13. மும்மைமலமும் கதிர்க் கற்றை வட்டப் பரிதி
முன் இருள் செய்து ஈரமதியின்
முழு நிலவு எறிக்கும் வெண்திருநீறு ஞானம் எனும்
மொய்குழலை மன்றல் புரிவார்
எம்மணிய தென்று புனை பன்முகக் கண்டியுடன்
இறைவன் அருள் அஞ்செழுத்தும்
இலிங்காங்க சங்க சமரசநிலைமை இதுவென்ன
இருள்அற உணர்த்து குருவும்,
மெய்ம்மை உணர்வொடு கலந்து உற்று இருந்து
வெளிப்பட்ட ஞான வடிவும் [அங்கையில்
விளங்கு **சரமும்** புனித **தீர்த்த** சிவசேடமும்
மேலுலக வித்து என்று அவை
தம்மை உலகினில் விளக்கிய வந்த தேசிகா !
சப்பாணி கொட்டியருளே
தனை அறியும் அறிவை அறிவென்ற சிவஞானியே
சப்பாணி கொட்டியருளே.

14. இளைக்கு மிடியற்கு உறுபொருளாம்,
இறைவற்கு அரசாம், கூற்றுவனை
விளிக்கும் பிணிக்கு மருந்தாகும்,
விடத்திற்கு அருஞ் சீர்க்கலுழனும்,
வளைக்கும் பகைக்குப் படையாகும்,
மலடர்க்கு அரிய மகவாகும்
திளைக்கும் கருணைச் சிவஞான
தேவன் திருக்கைத் திருநீறே.

## சிவப்பிரகாசர் துதி.

எவர்க்கும் மெய்ஞ்ஞான ஜோதி ஈயும் மாணிக்கமாகி
உவப்பொடு வெறுப்புமாகி உற்றிடும் விடயத்து எய்தும்
பவப்பெரும் புணரிநீந்தப் பாரதியாகும் எங்கள்
சிவப்பிர காச தேவன் திருவடி சென்னி சேர்ப்பாம்.

16. எழுபசும் புல்லும் புனலும் எவ்விடத்தும்
இருந்திட நினைத்த அவ்விடத்தே
விழைவொடு வந்து தோன்றுநீ இருப்ப
வீணில் மாநிடர் பிறந்து உழல்வார்
மொழிதரு கருணை மலை யெனும் பெயரன்
மொழியொரீஇ வேற்றுமைத் தொகையைத்
தழுவுற நின்று வளர்ந்திடும் சோண
சைலனே கைலை நா யகனே.

### வாழ்த்து.

பொருவரும் பூதி வாழ்க, பூதியை அணிவோர் வாழ்க
திருவருள் கண்டி வாழ்க, சிறந்த அஞ் செழுத்தும் வாழ்க
குருவருள் வாழ்க, மெய்யைக் கூறுநா வோர்கள் வாழ்க
வெருவரும் பிறவி தீர்க்கும் வித்தகர் வாழ்க வாழ்க.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# இஷ்டலிங்க அபிஷேகமாலை உரை.

பன்னிருசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பந்தமறு மரார்மிருடர் பவருருத் திரர்களொரு
பதினொருவர் மிளிர்பீடமேற்
படியிலை யைவகைப் படுமீசர் தாங்கிதம்
பத்திலெண் வித்தையிறைவர்
சந்தமுறு கோமுகத் தைங்கலைகள் சத்திசா
தாக்கியம் மூர்த்திவதனம்
தட்டற்ற வட்டத்தி லொட்டற்ற சிற்சத்தி
தாளுற்ற நாளத்திலே
நந்தலற வருகோள கந்திகழ் சிதம்பரம்
நற்சிகையி னிற்சூனியம்
நட்டமற வமைகின்ற விட்டவடி வொடுநின்ற
ஞானமய மோனநடுவோ
டந்தமற முந்துபர மானந்த நீநந்த
வபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்த
யபிடேக மாடியருளே. [விறை

இதன்பொருள்:—பந்தம் அறும் - பாசபந்தம் அற்ற, அரர்-(உருத்திரமூர்த்தியினுடைய இதயத்திலிருந்து அழித்தற்றொழிலைச் செய்விப்பவராகிய) அரர் என்னும் திருப்பெயர் பெற்றவரும், மிருடர் - (விண்டுவினுடைய இதயத்திலிருந்து காத்தற்றொழிலைச் செய்விப்பவராகிய)மிருடர் என்னும் திருப்பெயர் பெற்றவரும், பவர் - (பிரமனுடைய இதயத்திலிருந்து படைத்தற் றொழிலைச் செய்விப்பவராகிய) பவர் என்னும் திருப்பெயர் பெற்றவரும், உருத்திரர்கள்

ஒரு பதினெருவர்-பதினெருகோடி உருத்திர கணங்கட்குத் தலைவராகிய [1] ஏகாதச உருத்திரர்களும் ஆகிய இவர்கள் மிளிர் பீடம் - விளங்குகின்ற அடிப்பீடத்திலும், ஐவகைப்படும் ஈசர் - சிவமூர்த்தமாகிய சந்திரசேகரர் முதலிய, [2] இருபத்தைந்து ஈசர்களும், மேற்படியில் - இதற்கு மேற்படியிலும், எண் வித்தை இறைவர்-அனந்தர் முதலிய [3] அட்டவித்தியேச்சுரரும், நிதம்பத்தில்-இலிங்கத்திற்கண்டமாகிய நடுச்சந்திலும், ஐங்கலைகள் சத்தி - நிவர்த்திகலை முதலிய [4] பஞ்சகலைகளும், இச்சாசத்தி முதலிய [5] பஞ்ச சக்திகளும், சந்தம் உறு கோமுகத்து-அழகுற்ற கோமுகமாகிய மேல் வட்டத்திலும், சாதாக்கியம், மூர்த்தி, வதனம்—சிவ சாதாக்கியம் முதலிய [6] பஞ்ச சாதாக்கிய தத்துவங்களும், சதாசிவன் முதலிய [7] பஞ்சமூர்த்திகளும், ஈசானம் முதலிய [8] பஞ்சமுகமாகிய பிரபாவமும், தட்டற்ற வட்டத்

---

1, ஏகாதச உருத்திரர்:—மகாதேவ உருத்திரர், சிவ உருத்திரர், உக்கிர உருத்திரர், கங்கா உருத்திரர், நீலலோகித உருத்திரர், ஈசான உருத்திரர், விசய உருத்திரர், பீம உருத்திரர், தேவதேவ (சௌமியர்) உருத்திரர், பவோற்பவ உருத்திரர், கபாலீச உருத்திரர் என்னும் பதினெருவர்.

2. இருபத்தைந்து சிவமூர்த்தங்கள் :—சந்திரசேகரர், உமாமகேசர், விருஷபாரூடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, அந்தஹாரி, திரிபுரதகனர், சலந்தராரி, விதித்துவம்சர், வீரபத்திரர், நரசிம்மநிபாதனர், அர்த்தநாரீசர், விக்கிராதரர், கங்காளர், சண்டேசானுக்கிரகர், நீலகண்டர், சக்கிராபயப்பிரதர், கஜமுகானுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், அநங்கசுகப்பிரதத்துவர், தக்ஷிணமூர்த்தி, இலிங்கோற்பவர் என்னும் ஈசர்களாவர்.

3. அஷ்டவித்தியேஸ்வரர்:—அனந்தர், சூட்சுமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, சிகண்டர், சிகண்டி என்னும் எண்மர்.

4. ஐங்கலைகள்:—நிவர்த்திகலை, பிரதிட்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியாதீ தகலை.

5. ஐஞ்சத்திகள்:—இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, ஆதிசத்தி, பராசத்தி.

தில் - குறைவுற்ற ஆவுடையார் மேல் வட்டத்திலும், ஒட்டு அற்ற சிற்சத்தி - ஒன்றிலும் பற்றற்ற நிட்கள சிவத்துக்கு வடிவமாக விளங்கும் அபின்ன சத்தியாகிய சிற்சத்தி, தாள் உற்ற நாளத்தில்-மகாலிங்கத்தின் அடித்தானத்திற் காணப் படும் நாளக் குழியிலும், திகழ் சிதம்பரம்-விளங்குகின்ற சிதா காசம், நந்தல் அற வருகோளகம் - கெடுதலில்லாமல் மேலாக வந்த கோளமாகிய நாளக்குழியைச் சுற்றிய மேல் வரப்பிலும், சூனியம் - மிக நுட்பமான மனம் வாக்குக் காயங்களுக்கெட்டாமல் விளங்கும் வெறும்பாழ், நல்சிகை யினில் - அதற்குமேலுள்ள உச்சியிலும், நட்டம் அற அமை கின்ற-இங்ஙனம் எக்காலத்தும் கெடுதலின்றிப் பொருந்தி யுள்ள, ஞானமயமோனம் - ஞான சொரூபமாயும் பேச் சிறந்த இடமாயும், நடுவோடு அந்தம் அற முந்தும் - முத லிடை கடையென்னும் மூன்றும் நீங்க எப்பொருட்கும் முதலாக விளஙகும், பரம ஆனந்த - பேரானந்த வடிவ மாக விளங்கும், மகாலிங்க மூர்த்தியே! நீ நந்த - நீ (அடி யார் பால் அருள்) பெருகும்படி, அபிடேகம் ஆடியருள்– அடியேன் ஆட்டும் திருமஞ்சன அபிடேகத்தைக் கைக் கொண்டருளும், அறிவு உற்று - எனது உடலினுட்புறத்தே அறிவுருவாக அமைந்திருந்தும் அறிதற்கரும் பொருளாக நிற்குந் தன்மையை நாயடியேன் சிந்திக்கும்படி செய்து, என் அங்கை மகிழ் செறிவுற்று - எனது உள்ளங்கையாகிய தாமரை மலரின்கண் (கண்ட சாதாக்கிய முதலிய தத்துவ மூர்த்தி பிரபாவ சகள நிட்கள வடிவமான இஷ்டலிங்க வடிவமாக உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் புறத்தினல் கண்டு பூசிக்கும்படி) பொருந்தி - அமர்ந்த இறை–எழுந் தருளி இருக்கும் இறைவனே! அபிடேகம் ஆடியருள்– அபிடேகத்தைக் கொண்டருளும் என்றபடி.

---

6. ஐந்து சாதாக்கியம் :–சிவ சாதாக்கியம், அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கத்துரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம்.

7. பஞ்சமூர்த்திகள் :–சதாசிவன், மகேச்சுரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன்.

8. பஞ்சமுகம்:–ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம்.

இந்நூலாசிரியராகிய முனிவர் பெருமானுர் வேதாகம வாக்கியத்திற்கிணங்க, சிந்தாமணியென்னும் மந்திர சாஸ்திரத்திற்கண்டவாறு ஆவுடையாரிலே பீடமுதல் மேல் வட்டமட்டுமுள்ள ஆறு இடங்களிலும் சுத்தமாயாதோற்றச் சுவேச்சா ரூபமாகிய உருத்திர பேதங்களேயும், இருபத்தைந்து மூர்த்தங்களேயும், வித்தியாதிபதிகளேயும், பஞ்ச கலே பஞ்ச சக்திகளேயும் பீடம் படி நிதம்பம் கோமுகம் என்னும் நான்கிடத்தும் முறையே அடக்கி, சாதாக்கியம் மூர்த்தி வதனம் என்னும் தத்துவ மூர்த்திப் பிரபாவ மூன்றையும் மேல்வட்டத்திலடக்கி, இதுவரை சகள நிட்கள வுருவென்றுணர்த்தி, நாளத்தடியில் சிற்சத்தியையும் கோளகத்தில் சிதாகாசத்தையும் நிட்கள வுருவென்றுணர்த்தி, சிகையில் சூனியம் என்னும் அதி சூக்கும சுபாவ ரகசியம் அமைந்து நிற்கும் அருமையையும் கூறி விளக்கினுர் என்க. இங்ஙனம் மூவகையாற் கூறவே, அங்கத்தில் தூல சூக்கும காரண மூன்றுமடங்கியிருத்தல்போல இலிங்கத்தின் கண்ணும் தூல சூக்கும காரண மூன்றும் அமைந்துநிற்குந் திறத்தையும் கூறினுராயிற்று.

இன்னும் இவ்விலிங்கத்திற்குத் தத்துவமூர்த்திப் பிரபாவங்கள் ஆகமங்களில் பக்குவபேதத்திற் கேற்றவாறு பல முறையாகக் கூறப்பட்டுள்ளன ; ஆயினும் அவற்றுளெல்லாம் இதுவே அதிநுட்பமாயும் ஒப்பற்றதாயும் இருத்தலின் உண்மைக் கருத்தெனக் கோடல்வேண்டும். வீடுபெறும் வேட்கையுற்ருேர் உள்ளும் புறமும் ஏகீபவித்துத் தியானிக்கு நெறியை ஆசாரியர் முகமாக அறிந்துணர்தற்குரியர். இலிங்கபேதங்களும் கற்பபேதங்களால் பலவேறு வகைப்படும் ; அவற்றை வேதாகம புராணேதிகாசங்களானுணர்க.

**பூர்வசைவத்திற்** கிரியா பூசையில் இலிங்கபூசைக்கு அகோர சிவாசாரியார் பத்ததிமுதலிய பதினெட்டுப் பத்ததிகளினும், ஆகம விதிப்படி ஆகாரசத்தி முதலிய பதுமபீடங்களும், சசினியாதியான அட்டத்திரிம்சத் கலாநியாசமும், மண்டலத்திரயமும், கண்டபங்கி முண்டபங்கி வத்திரபங்கி

கலாபங்கி முதலிய தானபேதங்களும், பஞ்சப்பிரம மந்திரங்களும், முகமும் திக்குபேதமாக நிற்குமடைவும், இருதயம் சிரசு சிகை கவசம் நேத்திரம் அஸ்திரம் ஆனமூலமாதி சடங்கமும் ஆகப் பதினொருவிதமான முதலாவரணமும், இதற்குச் சதாசிவத் தியாநாதிகளும், துதியாவரணம் திரிதியாவரணம் சதுர்த்தாவரணம் பஞ்சாவரணமாக விதித்து அதற்கு ஆவரண தேவதைகளாதியான பூசையின் விரிவும் வேறுவேறு கூறிச் சவுராதி சண்டேச பூசை பரியந்தம் மிசிரபூசை யென்றும், சத்தி விக்கிரகமாத்திரம் இலிங்கத்துடன் வைத்துப் பூசிப்பது கேவல பூசையென்றும், பிரதமாவரணமாத்திரம் பூசித்துப் பதினொரு மந்திரத்தால் இலிங்கத்தை மாத்திரம் பூசிப்பது சுத்த பூசையென்றும், இலிங்கத்தில் எவ்வெத்தெய்வங்களை நினைத்துப் பூசிப்பினும் அவ்வத் தெய்வங்களெல்லாம் அதினின்றுந் தோன்றி வேண்டியவற்றைக் கொடுக்குமென்றுங் கூறுதலின் இவையெல்லாம் சகள நிட்கள மிரண்டிற்கும் பொதுவாயிருக்குமென்றுணர்க.

இது **உத்தர சைவர்** (வீரசைவர்)க்குரிய மோக்ஷ காரணமான ஞானபூசையாகலின் மந்திரகாண்டத்தில் ஞானபாதத்தில் எடுத்துக் கூறினரென்க. இன்னும் இலிங்கத்திற்குத் திரிகண்டஞ்செய்து ஆத்தும தத்துவம் வித்தியாதத்துவம் சிவதத்துவமாக்கியும் அவற்றிற்கு அதிதேவர் பிரமா விஷ்ணு உருத்திரரென்றும்,நாத விந்து கலை யென்றும், இஷ்டபிராண பாவமென்றும், அகார வுகார மகாரமென்றுஞ் சொல்லப்படும். அன்றியும் ஐந்துவிதமாக்கி ஐம்பொறி லிங்கம் பஞ்சவர்ணலிங்கம் பஞ்சகிர்த்திய லிங்கம் பஞ்சப்பிராணலிங்கம் என்றுஞ் சொல்லப்படும். ஆறுவிதமாக்கி ஆருதாரங்களினும் ஆசாரலிங்கம் குருலிங்கம் சிவலிங்கம் சரலிங்கம் (சங்கமலிங்கம்) பிரசாதலிங்கம் மகாலிங்கம் என்றும், ஆறுவித பக்தி சக்திகளை அங்கம் அத்தம் தலம் கந்தம் சுவை நிறம் என்றும் இப்படி அறுவகையான கிரியாபேதங்களாகக்கொண்டு பூசிக்கப்படுமென்றும், ஆகாசமயலிங்கம் சோதிமயலிங்கம் என்றும்

இவைகட்கெல்லாம் ரூபாரூபமாகிய சதாசிவமே தெய்வ மென்றும் சொல்லப்படும்.

இன்னும் க்ஷணலிங்கம் நவலோகலிங்கம் பாஷாண லிங்கம் நவரத்தினலிங்கம் பாணலிங்கம் பிரதிஷ்டாலிங்கம் சுயம்புலிங்கம் கிரியாலிங்கம் இச்சாலிங்கம் ஞானலிங்கம் உருவலிங்கம் அருவலிங்கம் உபயலிங்கம் சரலிங்கம் அசர லிங்கம் போகவியாங்கலிங்கம் எனப் பலவகையாகப் பகுத் துரைப்பனவெல்லாம் அவரவர் பக்குவத்திற்கேற்ற பாவ னைக்கு ஏகப்பட்டவையாய் நிற்கும். இவை இவ்வாசிரியர் கூறிய இலிங்கத்தின் பாணவட்டத்திற்குளடங்கி நிற்கும்.

இந்த இலிங்கம் பாவனாதீதமாய் மூவிதவுருவுநீங்கி ஞான ஞேய ஞாதிருவுங் கடந்துநிற்கும்; இதனை **அதர் வண வேதமந்திரமுடிவினாலும், சிவார்ச்சனாசந்தி ரிகை, சிவாக்கிரமணிதீபிகை, வீரசைவ தத்துவப்பிர காசம், மந்திரசாஸ்திரம் லிங்காயத வுபநிஷத்து, சதா சிவ விளக்கம், தத்துவமூர்த்திப் பிரபாவம் முதலிய சாஸ்திரங்களினாலும், ஆகமங்களின் உத்தரபாகங்களி** னாலும் குருமுகமாகக் கேட்டறிக.

இதனுள் இருபத்தைந்து மூர்த்தமும் கிரியாலிங்கத்து ளடங்கும்; கிரியாலிங்கமான சகள நிட்கள லிங்கமும் இவர் கூறிய சூனிய லிங்கத்தினுடைய அடிப்பீடத்தின் மேற்படி யின்கண் அடங்கிநிற்றலைக் காண்க.

அபரநாதம் அபரவிந்து அபரகலை, பரநாதம் பரவிந்து பரகலைசகிதமான பாவலிங்கமுங் கடந்து, சின்னாதம் சித் விந்து சித்கலையுந் தாண்டி நிரஞ்சன சூனிய நிட்களமான லிங்கம் இதுவே. குணங்குறி கடந்ததுமிதுவே. இது முத்தி வடிவாகலின் சதாசிவ மூர்த்தமான கன்ம சாதாக்கிய லிங் கத்திற்கு முயிராதலறிக. காய கரண - பாவமுங் கடந்து நிற்குமென்றது இதுவேயெனத் தெளிக. இதன்றன்மை யெல்லாம் சோமநாத ஆராத்தியர் பத்ததியினும் சின்மய தீக்ஷாவிதியினும் பரக்கக் காணலாம். இது பிரம நிச்சயங்

கூறியதென்றுணர்க. மிளிர்பீடம், உறுகோளகம் இவ்விரண்டும் வினைத்தொகை. பரமானந்த, அமர்ந்த விறை இவ்விரண்டும் அண்மைவிளி; " அண்மையினியல்பும் ஈறழியும் " என்பது சூத்திரம். நடுவோடந்தம் எனவே ஆதியுங் கொள்ளப்பட்டது ; உபலக்ஷணம்.

இதுவரையுங் கூறியவாற்ருன் இவ்விஷ்டலிங்கமே எவ்வகை மூர்த்திகட்கும் மூலமென்பதூஉம, ஆகமங்கள் பக்குவ பேதத்திற் கேற்றவாறு பலதிறப்படுமென்பதூஉம், அவையெல்லாம் ஆகமங்களின் உத்தரபாகத்தின் முடிந்த முடிபிற்கு உட்பட்டிருக்குமென்பதூஉம், பூர்வ சைவர்களுக்குக் கிரியா பூசையில் சிவலிங்கபூசை ஆவரண பூசை முதலியவற்ருற் பலதிறப்பட விரியுமென்பதூஉம், அவர்க்குச் சகள நிட்களமாகிய சதாசிவ மூர்த்தியே தியான மூர்த்தியென்பதூஉம், உத்தர சைவராகிய வீரசைவர்க்கு ஞானபூசையில் இஷ்டலிங்கபூசை ஒடுக்க முறையான் ஒருதிறப்பட்டு நிரஞ்சன சூனிய நிட்கள லிங்கமே தியான மூர்த்தியா மென்பதூஉம், இதனுசிரியர் கருவிலே திருவுடையராய் முற்றத்துறந்த முனிவர் பெருமானுதலின் வேதாகம மந்திர சாஸ்திரங்களின் முடிந்த முடிபைத் தங் கருணைப்பெருக்கால் அருளினுரென்பதூஉமாகிய இன்னேரன்ன பல அரிய கருத்துக்கள் உணரலாயின. (1)

**நாடரிய சத்தியோ சாதத்தும் வாமத்து**
**நன்ரு மகோரத்தினு**
**நவையற்ற புருடத்து மாகமமொ ரைவ்வைந்து**
**நல்கியீ சானத்திலே,**
**பீடுதரு மெட்டுமுறை தந்தவற் றிடைநீசொல்**
**பெருமைபெறு மருமைவிதியிற்**
**பேசரிய பூசைசிவ கோசரியெ னப்புரிதல்**
**பெற்றிலேன் மற்றடியனேன்,**

**வேடுவர்கு லத்தலைவன் மெய்யன்பு பூண்டிலேன்
வேட்டொருவர் மாட்டருளினுன்
மீக்கொளொரு புடையொப்பு நோக்கிவைத்
[தனை சாற்றின்
வேண்டல்வேண் டாமையிலையா,
லாடுநின் பால்வேறு பாடொன்றி லாமையா
லபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்த
யபிடேக மாடியருளே. [விறை**

இதன் பொருள் :—நாடு அரிய–தேடுதற்கரிய, சத்தியோ சாதத்தும் – (மேற்கு) நோக்கிய வெண்மைநிற மான சத்தியோ சாதம் என்னும் முகத்தானும், வாமத்தும்–(வடக்கு நோக்கிய செம்மை நிறமான) வாம தேவம் என்னும் முகத்தானும், நன்று ஆம்–நன்மையைத் தருவதாகிய, அகோரத்தினும் (தெற்கு நோக்கிய கருமை நிறமான) அகோரம் என்னும் முகத்தானும், நவை அற்ற–குற்றமற்ற, புருடத்தும்–(கிழக்கு நோக்கிய பொன்மை நிறமான) தர்ப் புருடம் என்னும் முகத்தானும், ஆகமம்–ஆகமங்களை, ஐவைந்து–ஐந்து ஐந்தாக, நல்கி–உண்டாக்கி, ஈசானத் தில்–(மேல் நோக்கிய சுத்த பளிங்கின் நிறமான) ஈசானம் என்னும் முகத்தால், எட்டு–எட்டாகமங்களை, முறைதந்து–முறையே (வரிசையாக) உண்டாக்கி அவற்றிடை–அவ் வாகமங்கள்தோறும், நீ சொல்–நீ சொல்லியருளிய, பெருமைபெறும்–மேன்மைபெற்ற, அருமை விதியின்–செய் தற்கருமையான பூசா விதிப்படி, பேசரிய–சொல்லுதற்கு அருமையான, பூசை–(சோடோபசாரத்துடன் செய்யும்) பூசையின், சிவகோசரி என (திருக்காளத்தியில்) சிவ் கோசரியார் என்னும் பெரியார் செய்ததுபோல, புரிதல் பெற்றிலேன்–(விதி மார்க்கந்தவருது) செய்யப்பெற்றி லேன், மற்று–அதுவன்றி, அடியனேன்–உமது அடியவன் எனப் பெறும் யான், வேட்டுவர் குலத்தலைவன்–வேடர் குலத்திற்குத் தலைவரான திண்ணனுரைப்போல, மெய்

யன்பு பூண்டிலேன்—(பக்தி மார்க்கமாகப் பூசையையும்) செய்யப்பெற்றிலேன், ஒருவர் மாட்டு—அவ்விருவருள் திண்ணனாகிய ஒருவரிடத்தில், அருளினால் – பெருங் கருணைத் திறத்தால், மீக்கொள் ஒருபுடையொப்பு—மேலாகக் கொள்ளத்தக்க ஒருபுடை யொப்புமையை, நோக்கி—பார்த்து, வேட்டு – (அத்திண்ணனரது பூசையையும்) விரும்பி, வைத்தனை—(விதிமார்க்கம், விலக்கு மார்க்கம் என்னும் இருவகைப் பூசையையும், இயற்றிய அவ்விருவரையும் ஒருபடியாகக் கருதி உயர்ந்த பதவியில்) வைத்தருளினீர், சாற்றின்—(அங்ஙனம் வைத்ததற்குக் காரணம் இன்னதெனச்) சொல்லுமிடத்து வேண்டல் வேண்டாமை இல—நீர் விருப்பின்கண் இச்சையும் விலக்கின்கண் வெறுப்பும் இல்லாதவராக இருக்கின்றீர். ஆடும் நின்பால்—அபிடேகிக்கும்படி உடன்பட்டிருக்கும் உம்மிடத்தில், வேறுபாடு ஒன்றி இலாமையால் விருப்பு வெறுப்பு ஒன்றும் வேறு பாடாகிய குணம் ஒன்று இல்லாமையால், அபிடேகம் ஆடியருள்—(விதி மார்க்கம், பக்திமார்க்கம் என்னும் இருவகை நெறியையும் பற்றாது அடியேன் செய்யும்) அபிடேகத்தையும் ஏற்றுக்கொண்டருளும் என்றபடி. 'அறிவுற்று என் அங்கை மலர் செறிவுற்றமர்ந்த இறை அபிடேக மாடியருளே' என்பதற்கு முதல் பாட்டில் கூறியவாறு அமைத்துக்கொள்ளுக.

ஒருபுடை யொப்புமையாகல்—இரண்டு பொருட்கண்ணும் பொதுத்தன்மை முழுதும் ஒத்தமையாது சிறுபான்மை ஒத்தமைந்திருத்தல். ஈண்டு ஒருபுடையொப்புமையாவது—அருமை விதியிற் பூசைபுரிதல் என்னும் விதிவகையால் ஒவ்வாது முயற்சி என்ற ஒருவகையால் ஒத்திருத்தல்.

ஆசிரியர் இஷ்டலிங்கப் பெருமானை முன்னிலையாக்கிக் "கரதலத்தமர்ந்த கருணைக் கடலே! அடியேன் ஆகமத்தில் விதித்தவாறு சிவகோசரியாரைப்போல விதிமுறை தவறாது பூசிக்கப்பெற்றிலேன்; அல்லது திண்ணனாரைப்

போல் மெய்யன்பையும் அடையப்பெற்றிலேன்; ஆனால், அவ்விருவருள் திண்ணனிடத்து உமது பெருங்கருணைத் திறத்தால் விதிவிலக்கென்னும் இரண்டையும் நோக்காது, முயற்சிவகையால் ஒருபுடை யொப்புமையை நோக்கி, அவர்பால் விருப்பம்வைத்து, இருவருக்கும் ஒப்ப முத்தி யளித்தருளினீர் ஆதலால் நீர், வேண்டல் வேண்டாமை யில்லாதவராகக் காண்கின்றீர். எவர் எது செய்யினும் உம்மிடத்து விருப்பு வெறுப்பென்னும் வேறுபாடில்லாமை யால் ஒருவகை நிலையையும் பற்றாது செய்யும் எனது பூசையையும் ஏற்றுக்கொண்டருளும்'' எனத் தம் பூசை யை மருது ஏற்றுக்கொள்ளுமாறு காரணங்காட்டி வினயந் தோன்ற வேண்டிக்கொண்டாராயிற்று. இந்நயம் நான்கா வது செய்யுட்கண்ணும் அமைந்திருத்தல் காண்க.

1. சத்தியோ சாதத்திற் றோன்றிய ஆகமங்கள் ஐந்தா வன:—காமிகம், யோகஜம் சிந்தியம், காரணம் அசிதம் என்பன.

2. வாமதேவத்தில் தோன்றிய ஆகமங்கள் ஐந்து ஆவன:—திபதம், சூட்சுமம், சகத்திரம், அங்கிசுமான், சுப்ரதீயம் என்பன.

3. அகோர முகத்திற் றோன்றிய ஆகமங்கள் ஐந்து ஆவன:—விசையம், நிசுவாசம், சுவாயம்பு, அநலம், வீரா கமம் என்பன.

4. தற்புருட முகத்திற் றோன்றிய ஆகமங்கள் ஐந்து ஆவன:—ரௌரம், மகுடம், விமலம், சந்திரக்கியானம், விம்பம் என்பன.

5. ஈசான முகத்தில் தோன்றிய ஆகமங்கள் எட்டா வன:—புரோரசிதம், விசிதம், சித்தம், சாத்தம், சர்வோத்த மம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என்பன.

ஆகமங்கள் 28 அன்றி உப ஆகமங்களாகவும் பல வுள்ளன. அவற்றின் விரிவையும், வரலாற்றையும் காமிக ஆகமத்தின் முதற் படலத்தில் காண்க.

இவ்வாகமங்கள் அனைத்தும் சிவபெருமானால் உமா தேவிக்கும், உமாதேவியாரால் நந்திதேவருக்கும், நந்தி தேவரால் பிரமற்கும், பிரமனால் இருடிகட்கும், இருடிக ளால் மனிதர்க்கும் முறையே கூறப்பெற்று வந்தனவென இவற்றின் வரலாற்று முறையை யறிக.

இனிப் பூர்வ சைவரது பூசாவிதிகளில் தற்புருட முகம் இஷ்டகாம்யங்களைக் கொடுத்தலானும், கிழக்கு நோக்கிய இந்திர திசையில் துவாரமாகிய சந்நிதானம் அமைத்துத் தாவர லிங்க பூசையும், ஆன்மார்த்த பூசை யும், தற்புருடமுகத்திலே செய்யின் ஏனைய முகங்கட்கும் திருப்தியாதலானும், தற்புருடமுகத்திலேயே சோடசோப சார பூசைசெய்யவேண்டுமென்றும், பூசிப்பவர் இலிங்கத் தின் தென்பால் வடக்கு நோக்கியிருந்து பூசித்தல்வேண்டு மென்றும் எதிர்முகமாக இருத்தற்கு இவர்க்குச் சக்தி யில்லையாதலின் இறைவர்க்கு எதிர்நின்று பூசைசெய்யின் கெடுவார் என்றும், வடபால் பார்வதியிருக்கும் அந்தரங் கத்தானமாதலின் இலிங்கத்தின் வடக்கிலிருந்து பூசிக்க லாகாதென்றும், மேற்குத்திசை பின்பக்கமாதலின் பின்னே யிருந்து பூசிப்பது வழுவென்றும் காரணங்காட்டி மகா கைலாச முதலிய பல தலங்களிலே இறைவர் பஞ்சக்ருத்தி யமும் இந்திர திசையை நோக்கித் தற்புருடத்திலே நின்று புரிவரென மேற்கோள் கூறித், தென்புறத்திலிருந்து அர்ச் சிக்கும்படி மந்திரங்களையும் ஈசானுதியாகக் கூறியிருப்ப, இவ்வாசிரியர் சத்தியோசாதத்தை முன்னர் எடுத்துக் கூறிப் பின்னர் வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசா னம் என்று லயமார்க்கமாகவுரைத்த தென்னையெனின், 'நன்று கூறினுய்! வீரசைவர்க்கு மோட்சகாரண பூசை யுரித்தாதலின் ஆகமங்கள்தோறும் உத்திரபாகத்தில் வீர சாமானியம், வீர விசேடம், வீர நிராபாரம் என்று மூன்று விதமாக விளங்க விரித்துரைக்கப் பெற்றிருக்கின்றது. பூர்வ சைவர்க்கோ அசத்திய நிர்வாண தீக்ஷை, சத்திய நிர் வாண தீக்ஷை என்னுமிரண்டால் முத்தியுண்டென்றும், அதுவும் அவர்க்கு மூன்று ஜனனத்தில் கைகூடும் என்

றும், பூருவபக்கம் பண்ணி, வீரசைவர்க்கு ஏக ஜன்மத்தில் முக்தியடையும்படி இருபத்தொருவிதமான தின்மய தீக்ஷையைக்கூறி அதன் வழியே ஞானக்கிரியாநு சந்தானமாக ஆசாரியரால் அங்கலிங்கசையோகம் பண்ணப்பெற்றுத் தாம் சிவலிங்கத்துக்கெதிர்முகமாக விருந்து லயமார்க்கமான மோக்ஷப்பிரதானமாக விளங்கும் சத்தியோசாதத்தில் பூசிக்கும்படி விதித்துப் பூசிக்கும்பொழுது தாம் கிழக்கு முகமாக விருந்து பேதசைவம்போல் தம்மைவிட்டு நீங்குதலில்லாத மகாலிங்கத்தை இடது கரதலத்தில் அங்குட்டபாரிசம் கோமுக மிருக்கும்படி எழுந்தருளப்பண்ணிக் காமியங்களை இச்சியாது நிரதிசய சிவசாயுச்சியத்தில் இச்சைவைத்து முத்தியருளும்படி வேண்டி அபிமுக (எதிரிமுக) மான சத்தியோ சாத முகத்திலேயே சகல சோடசோபசாரமுஞ்செய்து பூசிக்கக் கடவர் என்றுணர்த்தி, இதனுலிவர்க்கு யாதொரு குற்றமும் வாராதென்றும், உண்மை முத்தியுண்டென்றும் விளங்கக்கூறும் வாதுளாகம விதிப்படி இவ்வாசிரியர் கூறியுள்ளார்.

இஃதன்றித் தாவரங்களிலும், ஞானத்தலங்களில் மேற்குத் துவாரமாகச் சத்தியோ சாதத்தில் பூசிக்கும்படிக் கூறியுள்ள பூர்வசைவ பத்ததிகளும் உண்டு. அதன் விவரணைத்தும் அந்தந்தத் தலங்களிற்சென்று தரிசித்து ஆராய்ந்தறிக. அன்றியும், பூர்வ சைவரிலும் முத்தியை வேண்டினேர், அவ்வாறு ஆன்மார்த்தத்திலும் மேற்குத் துவாரத்திலிருந்து சத்தியோ சாதமுகத்தில் பூசிப்பர் என்பதும் உண்மையே.

'நாடரிய' என்று சிறப்பித்தவதனுல், முத்தியைக் கொடுக்கும் தன்மையது சத்தியோசாதமுகமென்றும் முத்தியின்கண் விருப்பமுடையவர்க்கேயன்றிக் காமியத்தை அவாவும் ஏனையரால் அறிதற்கருஞ் சிறப்பினையுடையது என்றும், வீரசைவர் தம் கரபீடத்தில் எழுந்தருளச்செய்து எதிர்முகமாகச் சத்தியோசாதமுகத்தில் பூசிப்பரென்றும் அறியும்படிக் கூறியதாயிற்று. இவ்வுண்மையைச் சற்குரு

வால் அறிந்துணராத வீரசைவர்களில் சிலர், சிறுபான்மை யாகச் சடுஸ்தலத்திற்கூறிய சமர்ப்பண விதியை மேற் கொண்டு தாம் பின்னிருந்து, தற்புருட முகத்திற் பூசிப் பதும் அன்றி, அபிடேகம் ஓர் முகத்தினும், தீபம் ஓர் முகத்தினும், நைவேதனம் ஓர் முகத்தினுமாக இப்படிப் பல்வகையாகவும் பூசிப்பர். அவர்கள் எதிர்முகமாக சத் தியோ சாதத்திலே எல்லாவற்றையுஞ் செய்யின் ஐந்து முகங்கட்கும் திருப்தியாமென்பதை அறிந்திலர்கள்போலும். ஆதலின் இதன் விவரமனைத்தும் சோமநாத ஆராத்தியர் பத்ததியில் அறிந்துணர்ந்து பூசிப்பதே நெறியாமென்றும் உணர்க.

ஆகமோற்பவ வகைகளும், அவற்றில் விதிக்கப்பெறும் விதிமார்க்கம், பக்தி மார்க்கம் என்னும் இரண்டானும் முத்தியுண்டென்பதும் விளக்கியது இது. (2)

**நவிற்றலரு மிதயமிளிர் கண்டநா வடிபுருவ**
**நடுவுபிர மப்புழையெனு**
**நல்லிடத் தகராதி கிரியாதி மனமுதல**
**நண்ணியு மைம்மூவகை**
**யிவற்றிலொவ் வொன்றகல நின்றவிட யங்களெதிர்**
**வின்றிச்சி வாகாரமா**
**யெதிருநன வுஞ்சோக மென்றுபா வித்தலுறு**
**மென்கனவு ஞாதுருவொடே**
**யுவப்பறிவு ஞேயமென வுற்றனுப வித்திடு**
**மொண்சுழுத் தியுஞானமே**
**யொளிர்துரிய முந்திலைத் துயர்சிவா னந்தநுகர்**
**வுறுமதீ தமுமாகுநல்**
**லவத்தைகள் கடந்தவற் றப்புறப் படுமமல**
**னபிடேக மாடியருளே**
**யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற் றமர்ந்தவிறை**
**யபிடேக மாடியருளே.**

இதன் பொருள் :- நவிற்றல் அரும்-(இத்தன்மைத் தென்று) சொல்லுதற் கருமையான, இதயம்- (சாக்கிரத் தானமான) இதயமும்,மிளிர்கண்டம்-விளங்குகின்ற(சொற் பனத்தானமான) கண்டமும், நா அடி- (சுழுத்தித்தான மான) நாவின் அடியும், புருவ நடுவு-(துரியத்தானமான) புருவத்தின் நடுவும், பிரமப்புழை-(துரியாதீதத்தானமான] பிரமரந்திரமும், எனும்-என்று சொல்லப்படும், நல்இடத்து-[1] நின்மல அவத்தைகட்குரிய ஐந்திடத்தும், அகராதி-[2] அகரமுதலான ஐந்தக்கரங்களும், கிரியாதி-[3] கிரியாசத்தி முதலான ஐந்து சத்திகளும், மனமுதல-மனம் முதலான ஐந்து கரணங்களும், நண்ணியும்-அக்கரம், சத்தி, கரணம் என மும்மூன்ருகப் பொருந்தியும், ஐம் மூவகை இவற் றில்-ஐந்து ஐந்தாகவுள்ள அக்கரம், சத்தி, கரணம் என் னும் மூன்றினுள், ஒவ்வொன்றகல-இதயத்தில் அகரமும், கிரியாசத்தியும், மனமும் நீங்க, நின்றவிடயங்கள் எதிர்வு இன்றி-(இவை நீங்குமுன்னர் எதிர்ப்பட்டு) நின்ற சப் தாதி விடயங்கள் எதிர்ப்படுதலின்றி, சிவாகாரமாய் எதி ரும் நனவும்-சிவம் ஒன்றுமே எதிர்முகமாகி உள்ளும் புறம்பும் ஒழிவற எங்கும் நிறைவாகத் தோன்றும் சாக்கிரா வத்தையும், சோகம் என்று பாவித்தவ் உறும் என் கன வும்-(இதற்குமேல் கண்டத்தானத்தில் உகரமும், இச்சா சத்தியும், புத்தியும் நீங்க, அங்ஙனம் எதிர்ப்படுதலுமின்றி) அதுவேதானென்று பாவிக்கும் சோகம்பாவனை வந்து பொருந்தும் என்று சொல்லப்படும் சொற்பனுவத்தை யும், ஞாதுருவொடு உவப்பு அறிவு ஞேயம் என உற்று-(இதற்குமேல் நாவின் அடித்தானத்தில் மகரமும், ஞான சத்தியும், ஆங்காரமும் நீங்க) ஞாதுருவாகிய காண்பா னுடன் மகிழ்ச்சியைத்தரும் அறிவாகிய காட்சியும், ஞேய மாகிய சிவமென்னும் பொருளும் என மூவகைப்பட்டு, அனுபவித்திடும் ஒண் சுழுத்தியும்-அனுபவிக்கும் ஒளி பொருந்திய சுழுத்தி யவத்தையும், ஞானமே ஒளிர் துரிய மும்-(இதற்குமேல் புருவமத்தியில் விந்துவும், ஆதி சத்தி யும், சித்தமும் நீங்க) ஞானமயமாக நின்று விளங்கும் துரியாவத்தையும், திளைத்து உயர் சிவானந்தம் நுகர்வுறும்

அதீதமும்–(இதற்குமேல் பிரமரந்திரத்தில் நாதமும் பரா சத்தியும் உள்ளமும் நீங்க, ஆன்மபோதங் கெட்டு அப் பொடு கலந்த உப்பேபோல) சிவத்தில் இரண்டறக் கலந்து, (காண்பானும் காட்சியுமற்று) உயர்ந்த சிவானந் தத்தையே புசித்திருக்கும் துரியாதீதமும், ஆகும் நல் அவத்தைகள்–ஆகிய நின்மலாவத்தைகள் ஐந்தையும், கடந்து–நீங்கி, அப்புறப்படும்–அவற்றிற்கு அப்புறமான துவாத சாந்தப்பெருவெளியில் வெறுஞ்சூனியமாக நிற்கும், அமலன்–என்றும் இயல்பாகவே மும்மலங்களினின்றும் நீங்கிய எமது இறைவனே ! அபிடேகம் ஆடியருள்–யான் செய்யும் அபிடேகத்தை ஏற்றுக்கொண்டருள்க என்றபடி. 'அறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்த இறை, என்ப தற்கு முதற் செய்யுளின்கண் உரைத்தாங்கு உரைத்துக் கொள்க.

இது நின்மலாவத்தைகள் நீங்கும் வகையும், அவற் றைக் கடந்து நிற்கும் சிவத்தின் தன்மையும் கூறியதென் றுணர்க. அவத்தை அவஸ்தை என்னும் வடசொற்றிரிவு. நல்லவத்தை, நல்லிடம் எனவே அவை நின்மலஅவத்தை, நின்மல அவத்தைகட்குரிய இடம் எனப்பொருள் கொள்ள லாயின. இதன்கண் அறிவுடையார் இன்றியமையாது அறிதற்பாலனவாகிய நின்மல அவத்தைக்குரிய தானங் களும், அவற்றுள் அமைந்த தத்துவங்களும், அவை முறையே நீங்கும் வகையும், நீங்கினவிடத்து நிற்கும் இறைவனது உண்மை நிலையும் கற்பனையின்றி விளக்கப் பெற்றமையால், இச்செய்யுள் இயற்கை நவிற்சியணி யின் பாற்படுமெனவறிக.

நின்றவிடயங்கள் எதிர்வின்றிச் சிவாகாரமாயெதிரும் நனவும் என்றது, நின்மல சாக்கிரத்தானமான இதயத்தில் அகரமும், கிரியாசத்தியும், மனமும் நீங்கு முன்னர் எதிர்ப் பட்டு நின்ற விடயங்களாகிய சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் (ஓதை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்) கள் ஐந்தும் நீங்கவே இவற்றுக்காதாரமான ஐம்பொறிகளும் ஒழியும்;

இந்த ஞானேந்திரியங்களும் ஒழியவே, இவற்றிற்கின மான கன்மேந்திரியங்களும், தனது காரியமான தன் மாத் திரைகளும் ஒழியும்; இவ்விரண்டுவித இந்திரிய விடயங் களும் ஒழியவே இவற்றிற்கு முதன்மையாய் நின்ற பஞ்ச பூதங்களும் ஒழியும்; இவையொழியவே இவற்றின் பஞ்சீ கரணக் கூட்டமாகிய தேகாதிப் பிரபஞ்சங்களும் ஒழியும்; இப்பிரபஞ்சந் தோன்ருதொழியவே சிவமென்னுஞ் செம் பொருளே எங்கும் வியாபகமாய்க் காணப்படுதலே நின் மல சாக்கிராவத்தையென விளக்கிய தென்க.

இந்த அவத்தைகளைப்பற்றிப் பல நூலாசிரியர்கள் பல் வேறு வகையாகக் கூறுவர்; அவற்றின் உண்மைகளை அறி வுடையார் அனுபவத்தாலாராய்ந்துணர்க. அவை வரு மாறு:- ஆன்மாவானவன் புறக்கரணம் அகக்கரணமாகிய இரண்டினுங் கூடியிருக்கிற தன்னை யறிவது நின்மல சாக்கிரமென்றும், புறக்கரணத்தைவிட்டு அகக்கரண வியாபாரத்துடனே கூடித்தன்னை யறிவது நின்மல சொற் பனமென்றும், அந்த அகக்கரண வியாபாரத்தைவிட்டுப் போகங்களில் விருப்புமின்றி அசைவற்ற மனத்துடன் கூடி யிருப்பது நின்மல சுழுத்தியென்றும், மனத்தையும்விட்டு சித்தாகிய ஞானத்துடன் கூடியிருப்பது நின்மல துரிய மென்றும், அதற்குமேலாய் நிரஞ்சனமாய் ஸ்வசம்வேத்து யத்திற் (தன்னறிவிற்)கு எட்டாத ஞான ரூபமாகிய சிவனு டன் ஐக்கிய முற்றிருப்பது நின்மல துரியாதீதமென்றும், இவைகள் ஒன்றுக்கொன்று சூக்ஷுமமாக இருக்குமென் றும் சிலர் உரைப்பர். இதனைச் சிவபெருமானது காருண் யத்தாலே இலாடத்தானத்திற் சாக்கிராவத்தையில் நிற்ப வர் தாமே மோக்ஷமடைதல் காரணமாக ஆசாரியர் உப தேசக்குறிப்பின்படியே நின்று நின்மல பஞ்சாவத்தையும் பொருந்திச் சமாதியிலிருப்பார்களென்றும், இதற்குச் சாக் கிரமே பீடமென்றுங் கூறுவாருமுளர். இன்னுஞ் சிவ சிவதத்துவமைந்தும் நின்மல சாக்கிர முதலிய ஐந்தா யிருக்குமென்றும், நின்மல சாக்கிரத்தில் சுத்தவித்தை- ஈசுவரம்-சாதாக்கியம்-சத்தி-சிவம் ஐந்தும் நிற்குமென்றும்,

நின்மல சொற்பனத்தில் ஈசுவரம் சாதாக்கியம் – சத்தி – சிவம்–நான்கும் நிற்குமெனவும், நின்மல சுழுத்தியில் சாதாக்கியம்–சத்தி–சிவம் மூன்றும் நிற்குமெனவும், நின் மலதுரியத்தில் சத்தி–சிவம் இரண்டும் நிற்குமெனவும், நின்மல துரியாதீதத்தில் சிவம் ஒன்றுமே நிற்க மற்றைய நான்கும் கழியுமென்றும் சிலர் உரைப்பர். இன்னும் வேதாந்தக்கட்டளையில் நனவிற் சாக்கிரம், நனவிற் சொற் பனம், நனவிற் சுழுத்தியென்று மூன்ருக்கி, நனவிற்– சாக்கிரத்தில் பஞ்சபூதம் போம்; நனவிற் சொற்பனத்தில் ஐம்பொறிகள் போம்; புருடனில் பிரகிருதிபோம்; கால பரத்தில் அதத்தமாயைபோம்; வியோமத்தில் சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் மூன்றும் போம்; பரத்தில் விந்துபோம்; விதவக் கிராசத்தில் நாதம்போம்; உபசாந்தத்தில் சுத்த மாயைபோம்; சொரூபத்தில் அஞ்ஞானம்போம்; இதனைச் சமாதியில் நின்று ஒன்றென்ருக நீங்கியறிக என்பர். இன் னும் பரையினது பேதமாகப் பதினெட்டு விதமாகவும் உரைப்பர் சிலர். சுத்தாவத்தையின் காரியம் என்பது, நின்மல சாக்கிரம், நின்மல சொற்பனம், நின்மல சுழுத்தி, நின்மல துரியம், நின்மல துரியாதீதம் என்னும் ஐந்தும் மல நிவர்த்திக்குக் காரணமாகும். அவை அநாதி சிருட்டி தொடுத்து மோக்ஷபரியந்தம் ஆன்மாவாலாகிய சிவபுண் ணியங்களாம். சிவபுண்ணியங்களாவன:—அபுத்தி பூருவ சிவ புண்ணியம், புத்தி பூருவ சிவபுண்ணியம், உபாய சரியை, உபாயகிரியை, உபாயயோகம், உபாயஞானம் உண்மை சரியை, உண்மை கிரியை, உண்மை யோகம், உண்மை ஞானம் என்று பத்துவிதமாயிருக்கும். இந்தப் பத்தில் முந்தின ஒன்பதும் மலநிலே; பிந்தின உண்மை ஞானமாகிய சிவ புண்ணியமொன்றும் அருள்நிலே. அந்த உண்மை ஞானமொன்றும் தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனப் பத்துவிதமாயிருக்கும், இந்தப் பத்தையும் சுத்தாவத்தை யின் காரியமாகிய நின்மல சாக்கிர முதலேந்தவத்தையி லடக்கி ஆசாரியர் பக்குவனுனசீடனுக்கு நிர்வாண தீக்ஷை

செய்து அறிவிப்பர். அவற்றை அடக்குமுறையாவது :— தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்ம ரூபம் இந்நான்கும் நின்மல சாக்கிரத்திலடங்குமென்றும், ஆன்ம தரிசனம், சிவ ரூபம் இவ்விரண்டும் நின்மல சொற்பனத்திலடங்குமென்றும், நின்மல சுழுத்தியில் தச காரியத்தில் அடங்குவதொன்றுமில்லையென்றும், ஆன்மா அருள் செய்யும் பஞ்சகிர்த்தியத்தை யான் செய்வே னென்று கருதுதல் மாத்திரமேயன்றிச் செய்வதில்லையென் றும் ஆன்ம சுத்தியும், சிவ தரிசனமும், சிவயோகமும், நின்மல துரியத்திலடங்குமென்றும், சிவபோகம் ஒன்றும் நின்மல துரியாதீதத்தில் அடங்குமென்றும் கூறுவர். இதன் விரிவை ஆகமங்களிற் பரக்கக் காணலாமாதலின் பெருகு மென்றஞ்சி இத்துடன் நிறுத்தலாயிற்று. (3)

**ஒருவனோர் பொருளிலாற் குற்றுதவி னுளம்வியந்**
**தோகைபெறு மன்றியுடைமை**
**யுதவுரு வமையத்தி லுதவினுந் தன்னிடத்**
**துள்ளதிற் பெரிதளிக்கும்**

**பொருளதா யினுமதனி னினியதா யினுமவன்**
**புந்திமகிழ் வுற்றிடுவனல்**
**புனல்விடுத் திடுமுடியி னிற்புணரி யிற்பெருகு**
**புண்ணியத் தெய்வநதிதான்**

**மருவலா னீர்விருப் பிலைநினக் கொருதிவலை**
**மற்றென்முடி யிற்றெறிப்பின்**
**வைப்பன்வா னத்தினென வெத்திறத் தானுநினை**
**மக்கணினை வுற்றுய்ந்திட**

**வருளினுன் முனம்விதித் தவனுத லான்மகிழ்ந்**
**தபிடேக மாடியருளே**
**யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை**
**யபிடேக மாடியருளே.**

இதன் பொருள் :—ஒருவன் – (உலகத்தார்க்குத் தன்னாலியன்ற நன்றியைச் செய்தலே தன் கடமை என உணர்ந்த) ஒருவன், ஓர் பொருள் இலாற்கு–ஓர் சிறிதும் பொருள் இல்லாதவனாகிய வறிஞனுக்கு, உற்று–(தானாகவே அவ்வறிஞன் இருக்குமிடந்தேடி) யடைந்து, உதவின் – (வேண்டியதொரு பொருளைக்) கொடுத்தால், உளம்வியந்து–(கிடைத்தற்கரிய பொருள் முயற்சியின்றிக் கிடைக்கப்பெற்றமையால்) உள்ளத்தின்கண் வியப்புற்று, ஓகைபெறும்–(அதனைப்பெற்ற வறிஞன்) மகிழ்ச்சியடைவன், அன்றி–அல்லது, உடைமை உதவுறு அமையத்தில்–(ஒருவன் பொருள் உடையவனாயிருந்தும்) தன் பொருள் தனக்குப் பயன்படாத காலத்தில், உதவினும்–(வேண்டியதொரு பொருளைக்) கொடுத்துதவினாலும், தன்னிடத்துள்ளதின்–(அல்லது) தன்னிடத்துள்ள பொருளினும், பெரிது அளிக்கும் பொருளது ஆயினும்–(பிறர் கொடுப்பது) பெரும்பயனைத் தரத்தக்க பொருண்மையை உடையதாயினும், அதனின் இனியது ஆயினும்–(அல்லது) தன்னிடத்துள்ள பொருளினும் இனிமையைத் தருவதாயினும், அவன்–அப்பொருள் கொடுக்கப்பெற்றான், புந்தி மகிழ்வு உற்றிடுவன்–மனம் மகிழ்ச்சியடைவன், புனல் விடுத்திடும் முடியினில் – (உலகியல் இங்ஙனமிருப்ப) அன்பர்களால் நீர்சொரிந்து அபிடேகம் செய்யப் பெறும் உமது திருமுடியின்கண், புணரியில் பெருகும் புண்ணியத் தெய்வநதி–கடல்போல் பெருகும் பேரளவினைக் கொண்டதும் புண்ணியத்தைக் கொடுக்கும் கடவுள் தன்மை வாய்ந்ததும் ஒப்புயர்வற்றதுமாகிய கங்கை நீர், மருவலான்–இடைவிடாது பொருந்தி இருத்தலான், நினக்கு நீர் விருப்பு இலை–உமக்குப்பிறராட்டும் நீரின்கண் விருப்பமில்லை, ஓர் திவலை என்முடியில் தெரிப்பின்-(அங்ஙனம் விருப்பமில்லாதவராயிருந்தும்) ஓர் துளி நீரையாயினும் எனது முடியின்கண் தெளித்தால், வானத்தின் வைப்பன் என–(அவ்வாறு தெளித்தோரையும் ஒரு பூதருமறியாத) சிதாகாசத்தின் கண்ணே என்றும் அழிவுறுதிருக்கும்படி வைத்துப் பேரானந்தத்தை நுகரச்செய்வேன்

என்று, மக்கள்—மனிதர்களனைவரும், எத்திறத்தானும்—எவ்வழியிலாயினும், நினை நினைவுற்று—உம்மை நினைத்து, உய்ந்திட—உய்யும்பொருட்டு, அருளினன்—உமது பெருங் கருணைத்திறத்தால், முனம்—அநாதிகாலத்திலேயே, விதித்தவன் ஆதலான்—(உமது வாக்காகிய 28 சிவாகமத்தின்கண்ணும் உமது பூசையின்பயனை) விதித்திருப்பவர் நீரேயாதலின், மகிழ்ந்து—(அடியேன் செய்யும் பூசைக்கும்) மகிழ்ந்து, அபிடேகம் ஆடியருள்—அபிஷேகத்தையாடி அருள்வீராக என்றபடி. "அறிவுற்று...இறை" என்பதற்கு முதற்செய்யுளின்கண் உரைத்தாங்கு உரைத்துக்கொள்க.

என் அங்கையின்கண் எழுந்தருளியிருக்கும் இஷ்டலிங்கப்பெருமானே! இவ்வுலகின்கண் பிறர்க்குதவிசெய்து மகிழ்விக்கக் கருதிய ஒருவன் ஓர் பொருளுமில்லாத வறிஞனுக்குத் தானாகவே அவனிருக்குமிடந்தேடிச்சென்று வேண்டியதொரு பொருளைக் கொடுத்தால், அந்த வறிஞன் கிடைத்தற்கரியபொருள் முயற்சியின்றிக் கிடைத்தமையால் மகிழ்ச்சியடைவான், அல்லது பொருளுடையவனாயிருந்தும் தன் பொருள் தனக்குதவாத காலத்தில் வேண்டிய பொருளைக் கொடுத்துதவினாலும், அல்லது தன்னிடத்திலுள்ள பொருளினும் பெரும்பயனைத் தரத்தக்க பொருளைக் கொடுத்துதவினாலும், அல்லது தன் பொருளினும் இனிமையைத் தரத்தக்க பொருளாயிருப்பினும் அப்பொருள் பெற்றான் மகிழ்ச்சியை அடைவன். உலகியல் இங்ஙனமிருக்க, நீரோ கடல்போற்பெருகும் பேரளவினையுடைமையாலும், பெரும் புண்ணியத்தைக் கொடுப்பதாலும், கடவுள் தன்மை வாய்ந்ததாலும் ஒப்புயர்வற்று விளங்கும் கங்கைநீரை என்றும் இடைவிடாது உமது திருமுடியின்கண் உடையவராயிருத்தலின் பிறராட்டும் நீரின்கண் விருப்பமில்லாதவராயிருக்கின்றீர். ஆயினும், உலகின்கண்ணுள்ள மக்களனைவரும் எவ்வழியிலாயினும் உம்மை நினைந்து உய்யும்பொருட்டு அநாதிகாலந்தொட்டே சிவாகமங்களில் எனது முடியில் ஒரு துளி நீரையாயினும் தெளிப்பவரை அடைதற்கரிய சிதாகாச வெளியின்

கண்ணேவைத்துப் பேரின்பத்தை நுகரச்செய்வேன் என்று நீரே விதித்திருக்கின்றமையால், அடியேன் ஆட்டும் அபிஷேகத்தையும் ஏற்றுக்கொண்டு அருள்வீரென்ன ஆசிரியர் நயம்பெற வேண்டிக்கொண்டாராயிற்று. இதனால் இறைவனாகிய சிவபெருமான் நிட்கள வடிவாய் எங்கும் நிறைவுற்றவராயும் ஒன்றையும் வேண்டாதவராயும் இருப்பினும் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டுச் சகள நிட்கள வடிவமாய் எழுந்தருளி எவற்றையும் ஏற்றுக்கொள்வரென்பது பெறப்படுகின்றது.

'முடியினில்' ஏழனுருபு இடப்பொருளின்கண்ணது. 'புணரியில்' ஐந்தாவது ஒப்புப்பொருளின் கண்ணது. (4)

கருகிச்சி வந்தகடு வருகிப்பொ ருந்தமிளிர்
களம்வாழ்வு மேவவணிவாய்
கடலிற்சி றந்தநிற வுடலிற்றி ருந்துமணி
கதிர்போல வேயுநெடுமால்
ஒருகட்கி சைந்தவடி யிருகட்கி ணங்கவற
முடையார்மு ஞேடிவருவா
யுலகத்தை வென்றமன மிலகுற்ற மன்றினிடை
யுமைகாண வாடல்புரிவாய்
மருகற்பெ ரும்பதியி லொருகற்ப ணங்குதொழ
மணவாள ஞவியுதவா
மயிலைக்க ணென்பினுயிர் பயில்வுற்றெ ழுந்துவர
வருவாயெ ஞமுனழையா
வருகர்க்க ணங்குதரு முருகர்க்கு கந்தவர
னபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

இதன் பொருள்:—கருகி-(உலகமெங்கும்இருள் மயமாகும்படிக்) கருநிறமாகத் தோன்றி, சிவந்த-(தேவர் முதலிய சராசரங்கள் அனைத்தையும் அழித்தற்கு) கோபித்தெழுந்துவந்த, கடு-(மிகப்பெருகியதோர்) ஆலகால விஷத்தை, அருகிப் பொருந்த-சுருங்கின அளவினதாகப் பொருந்துமாறு, மிளிர்களம்-விளங்குகின்ற கண்டத்தின்கண், வாழ்வு மேவ-(அத்தேவர் முதலிய அனைத்துயிரும் பிழைத்து) நல்வாழ்வினை அடையவேண்டி, அணிவாய்-(பெருங்கருணைத் திறத்திற்கோர் அடையாளமாக அணிபோல் விளங்க) அணிபவனே! கடலிற் சிறந்த நிறம் உடலில்-கடல்போல் விளங்கித்தோன்றும் நீலநிறமான திருமேனியின்கண், திருந்துமணி-(வேண்டிய இலக்கணங்களிற் குறைவின்றித்) திருந்திய கவுத்துவமணி, கதிர்போல ஏயும்-சூரியனைப்போலப் பொருந்தப்பெற்றுள்ள) நெடுமால்-திருமால், ஒருகட்கு இசைந்த-தனதொரு கண்ணைப் பிடுங்கி அருச்சித்த அச்செயலுக்கு இசைந்திருந்த, அடி-உனது திருவடிகள், இருகட்கு இணங்க-இரண்டு கண்களும் எளிதில் கண்டு தரிசித்தற்குத் தாமாக இணங்கி முன்னிற்கும்படி, அறம் உடையார்முன் ஓடிவருவாய்-(வேதாகம முறைப்படி) சிவபுண்ணியத்தைச் செய்யும் உண்மை அடியார்முன் விரைந்துவந்து அருள் செய்பவனே! உலகத்தை வென்ற மனம்-(உலகத்தோற்றம் அனைத்தும் மாயா கற்பிதமென்று) உலகப்பற்றை வெறுத்தொழித்து அகமுகத்தால் தியானிக்கும் மெய்ஞ்ஞானியரது உள்ளமாகிய, இலகுற்ற மன்றினிடை-விளங்குகின்ற சபையின்கண், உமைகாண-உமாதேவியார் கண்டு மகிழும்படி, ஆடல்புரிவாய்-நடனம் செய்தருள்பவனே! மருகல் பெரும்பதியில்-திருமருகல் என்னும் தலத்தின்கண், ஒரு கற்பு அணங்கு தொழ-ஒப்பற்ற கற்புடைய தெய்வமகளிரையனைய ஓர் பெண்விளங்க, மணவாளன் ஆவி உதவா-(விஷம் தீண்ட இறந்த) மணத்தற்குரிய காதலனது உயிரைக் கொடுத்து எழுப்பி, மயிலைக்கண்-திருமயிலை என்னும் தலத்தின்கண், என்பின்-(ஞானசம்பந்தற்காக அற்பிதம்செய்து வைத்திருந்த சிவநேசச் செட்டியாரது

பெண்ணினுடைய) எலும்பின்கண், உயிர் பயில்வுற்று– உயிரும் வியாபித்து, எழுந்துவர–(கும்பத்திலிருந்து பெண் ணுருவாக) எழுந்துவரும்படி, வருவாய் எனுமுன்–(அச் சம்பந்தர் நகையாடும் சமணர் முன்னே எனது பாட் டுக்கு விரைந்து) வருவாய் என்றழைப்பதற்குமுன், அழையா–அப்பெண்ணை உயிர்ப்பித்து வரும்படி அழைத்து, அருகர்க்கு அணங்குதரும்–சமணர்கட்குத் துன் பத்தைத் தந்த, முருகர்க் குகந்த–திருப்புகலூர் முருகநாய னரது பணிக்கு விரைந்து முத்தியளித்தருளிய, அரன்– அரன் என்னும் திருப்பெயரையுடைய இறைவனே! அபி டேகம் ஆடியருள் – (யான்செய்யும்) அபிஷேகத்தையும் ஏற்றுக்கொண்டருள்வாயாக என்றபடி. "அறிவுற்று...... ஆடியருள்" என்பதற்கு முன்னுரைத்தாங்கு உரைத்துக் கொள்க,

அமரராதியோர் வாழ்வுமேவ கடுவைக்களத்தில் அணிபவனே! "அறமுடையார் முன் விரைந்து வந்தருள்பவனே! மனமன்றில் உமை யவள் காண மகிழ்ந்தாடுபவனே! எனவும், மணவாளன் ஆவியுதவி, மயிலைக்கண் என்பில் உயிர் பயில்வுற்று எழுந்துவர, 'வருவாயெனு முன்' அழைத்து, அருகர்க்கு அணங்கைத் தராநின்ற, முருகர்க் குகந்த இறைவனே!" எனக்கூட்டி முடிக்க. இதன்கண், முருகன் என்னுஞ் சொல்லுக்கு 'கட்டிளமையோன்' எனப் பொருளுண்மை யால், முருகர் என்பதற்கு ஞானசம்பந்தப்பிள்ளையாரெனப் பொருள் கூறி, 'மருகற் பெரும்பதியின் ஒரு கற்பணங்கு தொழ மணவாளன் ஆவியுதவா மயிலைக்கண் என்பினுயிர் பயில்வுற்றெழுந்துவர வருவா யெனு முன் அழையா அருகர்க்கு அணங்குதரும் முருகர்' என ஒரு தொடராக்கி, 'திருமருகலில் ஓர் கற்புடையாள் வணங்க, அவளது மணாளனது உயிரை உதவியும், திருமயிலைக்கண் எலும்பில் உயிர் வியாபித்து எழுந்து வரும்படிப் பூம்பாவாய்! விரைந்து வருவா யென்று முன் அழைத்தும், அருகர்க்கு அணங்கைத் தந்த முருகர்' எனப் பொருள் கூறினும் பொருந்தும். இப்பொருளில் உதவா, அழையா இவ்விரண்டும் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச் சங்கள், அணங்குதரும் என்னும் பெயரெச்சத்தையும், அப்பெயரெச் சம் முருகர் என்னும் பெயரையும் கொண்டு முடிதல் காண்க.

'அருகற்கணங்குதரும் முருகற்கு' எனப்பாட பேதங்காட்டி, அரிய கல்லாகிய கிரவுஞ்சமலேக்குத் துன்பத்தைத்தந்த சிங்காரவேலற்கு எனப்பொருள் கூறுவாருமுளர்.

ஆசிரியர், இதனுல் சிவபெருமானே தேவாதி தேவனுகிய மகா தேவனென்னும் உண்மையும், அப்பெருமான் செருக்குற்ருர்க்கு அரிதிலும் அஃதில்லாத அடியார்க்கு எளிதிலும் தன் திருவடிப்பேற்றைத் தரும் தண்மையும், ஞானிகளது சிதாகாசச் சிற்சபையில் நடனம் புரிந்தருளும் இயல்பும், அடியார் சமய உண்மைநிலே நாட்டவேண்டும் செயற்கருஞ் செயல்களேயும் முடித்தருளும் கருணேயும் விளங்க உணர்த்திஞராயிற்று.

விஷமுண்ட வரலாறு, திருமால் கண்ணிடந்தருச்சித்த வரலாறு, திருமருகலில் விஷத்தாலிறந்தவனே யுயிர்ப்பித்த வரலாறு, எலும்பைப் பெண்ணுக்கிய வரலாறு ஆகிய வரலாறுகள் இச் செய்யுளிற் கூறப் பெற்றுள்ளன. (5)

ஓகைமலி குருவாணே யுறுவிக்கு மாணேயு
முயர்புரா தனசரிதமோ
டொக்குநடை வருவிக்கு முவமையுந் தன்மகனே
யொண்சுவத் திகமேற்றுபு
சோகமறு மனுமயஞ் செய்தமைத் திடுமொரு
சுவத்திகா ரோகண முநூல்
சொல்லிய விடங்களிற் றூயநீ றணிதருந்
தொல்விபூ திப்பட்டமும்
மாகலச நீராட்டு கலசாபி டேகமு
மருவுசிவ நோக்குவிக்கும்
வயங்குலிங் காயதமு மன்னுசிவ லிங்கமுரு
வனேசுவா யதமுமெனுமே

**ழாகுநெறி தான்மருவி யாகமிசை யிலகுமர**
**னபிடேக மாடியருளே**
**யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை**
**யபிடேக மாடியருளே.**

இதன் பொருள் :- ஓகை மலி குரு-(முன்னரே, இலிங்கதாரணஞ் செய்யப்பெற்று சாமானியம், விசேடம், நிராபாரம் என்னும் மூவகை தீட்சையையுங் பெறுதற் குரியவரான வீரசைவர்க்கு வேதமந்திர கிரியா தீட்சை யைச் செய்த பின்) மகிழ்ச்சிமிகும் ஆசாரியார், ஆணை வுறுவிக்கும்-(தம் மகனுகிய சீடனுக்குத்) தமதாணையை அடையச் செய்வித்தலாகிய, ஆணையும்-ஆக்கிஞு தீட்சை யும், உயர் புராதன சரிதமோடு-உயர்ந்த பழமையான சரித்திரத்துடன், ஒக்கும் நடை வருவிக்கும் - ஒத்த சமயா சார ஒழுக்கங்களைப் போதிக்கும், உவமையும்-உபமா தீட் சையும், தன் மகனை-தமது மகனுகிய சீடனை, ஒண் சுவத் திகம் ஏற்றுபு-ஒளி பொருந்திய சுவஸ்திகாசனத்தில் ஏற்றி, சோகம் அறும்-சோகமற்ற, மனுமயம் செய்த மைத்திடும்-மந்திர ரூபமாகச்செய்து இருக்கச்செய்யும், ஒரு சுவத்திகா ரோகணமும்-ஒப்பற்ற சுவத்திகாரோகண தீட்சையும், நூல் சொல்லிய இடங்களில்-(சித்தாந்த சிகாமணி முதலிய) நூல்களில் சொல்லப்பட்ட பதினேந்திடங்களில், தூய நீறு அணிதரும்-தூய்மையான திருநீற்றை அணிவித்தருளும், தொல் விபூதிப் பட்டமும் - பழமையான விபூதிப் பட்ட தீக்ஷையும், மாகலச நீராட்டு பெருமை வாய்ந்த ஸ்ரீபஞ்சா சாரிய கல சோதகத்தால் அபிஷேகம் செய்விக்கும், கலசா பிடேகமும்-கலசாபிடேக தீட்சையும், மருவு சிவம் நோக்கு விக்கும்-எழுந்தருளி இருக்கும் சிவலிங்கத்தைச் சீடனுக் குத் தரிசிப்பித்தலாகிய, வயங்குலிங்காயதமும்-விளங்கும் இலிங்காயத தீட்சையும், மன்னு சிவலிங்கம் - பொருந்தி இருக்கும் சிவலிங்கத்தை, உருவனை சுவாயதமும்-(சீடனது சிரம் முதலிய வுத்தம) உருவத்தில் தரிப்பித்த லாகிய இலிங்க சுவாயத தீட்சையும், எனும் ஏழாகும் நெறி தான் மருவி-என்று சொல்லப்படும் ஏழாகிய தீட்சைநெறி

யைப் பொருந்தி, ஆகமிசை இலகும் அரன்—தேகத்தின் கண் இஷ்டலிங்க மூர்த்தியாக விளங்கும் அரனே! அபிடேகம் ஆடி அருள்—அபிடேகத்தை ஏற்றுக்கொண்டு அருளும்.

வீரசைவ தீட்சை, இஷ்ட, பிராண, பாவ லிங்க தீக்ஷையென மூவகைப்படும். இவை முறையே வீர சாமானியருக்குத் தூல தேகத்தின்கண்ணும், வீர விசேடருக்குச் சூக்குமதேகத்தின்கண்ணும், வீர நிராபாரருக்குக் காரண சரீரத்தின் கண்ணும் செய்யப்பெறுவன. விரிவு வீரசைவ சின்மய தீட்சைவிதியிற் காண்க.

இவர் சின்மய தீட்சாவிதியை மூவேழாகவுரைப்பக் கருதி, இத்திரு விருத்தத்துள் தேகாபிமான தீட்சை ஏழும் உரைக்கின்றார். தூலதேகத்தின்கண் செய்யப்பெறும் இஷ்டலிங்க தீக்ஷை ஆக்கினை, உவமை, காயாரோகணம், விபூதிப்பட்டம், கலசாபிடேசம், இலிங்காயதம், இலிங்க சுவாயதம் என எழுவகைப்படும். அவற்றுள், அக்ஞா தீக்ஷை ஆசாரியரானவர் முன்னரே இலிங்கதாரணம் செய்யப்பெற்றுள்ள சீடனை அருகழைத்து உன்கரத்தில் கொடுக்கப்படும் சிவலிங்கமே பிராணலிங்கம்; தத்துவா தீதமான பரஞ்சோதி வடிவமானது. இதனைக் கணப் பொழுதாயினும் உனது தேகத்தினின்றும் பிரியாமலிரு. திரிகாலங்களிலும் நீராடி விதிப்படிப் பூஜைசெய், இலிங் கார்ப்பிதமில்லாத எதையும் கொள்ளாதொழிக. போக மோட்சங்களனைத்தும் உன்கரத்தில் கலந்துள்ளவாக நம்புக.

இனி, சத்த பாதகமாகிய [1]பவிபாகம், பவிசங்கமம், பரதெய்வம், பரதிரவியம், பரதாரம், கொலை, களவு, கள்ளுண்டல் என்னும் ஏழையும் கனவிலும் கருதற்க. செனன சூதகம், மரணசூதகம், சாதிசூதகம், மாதசூதகம், உச்

---

1. பவிபாகம்—வீரசைவர் அல்லாத மற்றவரால் பாகஞ் செய்படும் உணவு.

சிட்ட சூதகம் என்னும் பஞ்சசூதகத்தையும் விட்டொழிக. என்றிப்படிக் கட்டளையிட்டுத் தமதாணையின்படி நிற்கச் செய்தல்.

உபமாதீக்ஷை:—ஸ்ரீ இரேணுகராதி புராதன கணர்களும் ஸ்ரீ பசவராதி பிரமதகணர்களும் ஒழுகிய வீரசைவ சமயாசாரங்களைச் சரித்திரவாயிலாக எடுத்துக்காட்டி 'அவற்றோடு ஒப்ப நடப்பாயாக' எனக்கட்டளை இடல். ஏனைய ஐந்தும் காட்சிவகையான் அறியற்பாலன.

**பஞ்ச சூதக விசாரம் :--** ஸ்ரீமத் பஞ்சாசாரிய சாம்பிரதாயகரான ஸ்ரீ கரபாஷியகாரர் பாஷிய கிரந்தத்தில் "சிவலிங்க பூசை செய்பவர், அக்நிஹோத்ரஞ் செய்பவர், பிரமசாரி விரதத்தை யனுட்டிப்பவர், யதிகளாயுள்ளவர் எவரோ அவரது சரீரத்தில் யாதொரு சூதகமுமில்லை. சிவலிங்க பூஜாவிரதியான பெண்பாலர் ரஜஸ்வலை (மாசூதகம்) யுடையவராயிருப்பினும், மற்றவர் ஏனைய சூதகங்களை யுடையராயினும் அவர் எவ்விடத்தும் வியாபித்திருக்கும் சூரியன், அக்நி, வாயுக்கள் எப்படித் தூய்மையுடையனவாகின்றனவோ அவற்றினுந் தூய்மையுடையராகின்றனர். மாத சூதகத்தையுற்ற காலத்தினும் நீராடுதல் முதலியவற்றால் தூய்மையுடையராயிருந்து நித்திய லிங்கார்ச்சனையை விடாது செய்தல்வேண்டும் என்று சித்தாந்த சிகாமணி, பராசரஸ்மிருதிப் பிரமாணங்களினால் உதாகரித்து, இலிங்க தாரிகளுக்குப் பஞ்ச சூதகமில்லை யென்பதனால் ரஜஸ்வலையான பெண்பாலரால் செய்யப்படும் பாகமும் ஏற்றுக்கொள்ளப்படுமோ எனின் அற்றன்று. அங்ஙனம் கொள்ளின் சிவலிங்கார்ச்சனையில் மாத்திரம் சூதகங்களில்லையெனக்கூறும் சிவாகமங்களுக்கே விரோதமாகும். அன்றியும் வைதீகருக்கே இலிங்கதாரணம் தக்கதன்றெனவும் ஏற்படும்; ஆதலின் ஆகமங்களின் விதி விலக்குகளைப் பூர்வோத்தர பாகங்களைத் தழுவி இடமறிந்துகொள்ளுதல் வேண்டும்.

பௌண்டரீ யாகத்தில் யஜ்ஞத்தைச் செய்யும் யஜமானன் மனைவியும், அக்னிஹோத்ரஞ் செய்பவன் மனைவியும், ரஜஸ்வலையானாலும் அங்கு எப்படி ஆசௌசமின்மை விதிக்கப்பட்டுள்ளதோ அப்படியே இலிங்காங்கியாகிய பெண்ணுக்குச் சிவலிங்க பூசையில் மாத்திரம்

ஆசௌசமின்மை விதிக்கப்பெற்றுள்ளது. "பார்வதியே! நாவானது கரத்தால் தொடுதற்கும், மந்திரோச்சாரணத்திற்கு மாத்திரம் தூய்மை யாகின்றதோ அப்படியே சூதகமான வீரசைவப் பெண்கள் தமது இஷ்டலிங்க பூசைக்குமாத்திரம் உரியவரேயன்றி ஏனைய பாகஞ்செய் தல் முதலியவற்றிற்கு உரியவராகார். இஃது வேதாந சாசனமென் றறிக; என்று சித்தாந்த சிவாகமங்களைக்கொண்டு சிவபூசைக்கு மட்டிலும் அதிகாரமுள்ளதென ஸ்ரீ கரபாஷியத்தில் விளக்கியுள்ளார். (6)

**போயகுல மொடுசரண ரொடுமேவு சமயமும்**
**பொன்றுலகம் விட்டமலனுர்**
**பூசனைகொ ளரியநிர்ச் சஞ்சார முங்கொடிய**
**பொன்பெண்மண் ணுசைநெறியிற்**
**பாயமன மோடாத நிட்பிரா ணமுமெய்ம்முப்**
**பத்தாறு தத்துவமறப்**
**பகுதியொடு ணர்த்துதத் துவமுமிறை யஞ்சனீ**
**பாரென்னு மான்மிகமுமே**
**மேயசடு லிங்கமுட னுறங்க மாகுமொரு**
**மெய்யனுக் கிரகநிலையும்**
**விமலமுறு சச்சிதா னந்தசிவ மயமென்னு**
**மிக்கசத் தியசுத்தமு**
**மாயவெழு வகைநெறியி னுவியிடை யிலகுமர**
**னபிடேக மாடியருளே.**
**யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மார்ந்தவிறை**
**யபிடேக மாடியருளே.**

இதன் பொருள்;— போயகுலமோடு—(கற்பிதமாகிய பல்வேறு வகைப்பட்ட) சாதிபேதங் கருதலின்மையுடன், சரணரொடுமேவு (அங்ஙனம் பேதமின்றி விளங்கும்) சிவ சரணர்களோடு பொருந்தச் செய்தலாகிய, சமயமும்—சமய

தீக்ஷையும், பொன்றுஉலகம் விட்டு—அழியும் இயல்புடைய தநு, கரண, புவனபோகங்களாகிய உலகப்பற்றை விட்டு, அமலனுர் பூசனைகொள்—(இயல்பாகவே) மலமின்றி விளங்கும், சிவபெருமானது பூஜையையே (சஞ்சாரமாகக்) கொள்ளச் செய்தலாகிய, அரிய நிர்ச்சஞ்சாரமும் – பெறுதற்கரிய நிர்ச்சஞ்சாரமென்று கூறப்படும் தீக்ஷையும், கொடிய பொன் பெண் மண் ஆசைநெறியில்—(தங்கள் பற்றுடையானைப் பிறவியின்கண் வீழ்த்தும்) கொடிய தன்மையுடைய பொன், பெண், மண் என்னும் மூவகை ஆசையாகிய பொய்ந்நெறியின்கண், பாய் மனம் ஓடாத—பரந்து சென்றலையும் இயல்புடைய மனத்தை ஓடாதபடித் தடுத்து நிலைபெறச் செய்வித்தலாகிய, நிட்பிராணமும்—நிட்பிராண தீக்ஷையும், மெய் முப்பத்தாறு தத்துவம் அற—உண்மையான முப்பத்தாறு தத்துவங்களும் நீங்க, பகுதியோடு உணர்த்து—அவற்றின் பாகுபாட்டுடன் விளக்கிக் காட்டும், தத்துவமும்—தத்துவ தீக்ஷையும், இறை நீ அஞ்சல் பார் என்னும்—தத்துவங்கடந்த இறைவனுகிய அந்த சுயம்புலிங்கம், 'நீ அஞ்சாது பார்த்தறிதி என்று காட்டும், ஆன்மீகமும்—அத்தியாத்மீக தீக்ஷையும், மேய[1] சடு லிங்கமுடன் [2] ஆறு அங்கம் ஆகும்—இங்ஙனம் பொருந்திய பரசிவமே ஆசாரலிங்கமாகிய ஆறு லிங்கமாயும், பத்தன் முதலாகிய ஆறு அங்கமாயும் இருக்கும் என்றுணர்த்துதலாகிய, ஒரு மெய் அநுக்கிரகநிலையும்—ஒப்பற்ற உண்மையான அநுக்கிரக தீக்ஷையும், விமலமுறு சச்சிதானந்த சிவமயமி என்னும்—மலமின்மை பொருந்திய சச்சிதானந்த பிரம்மமே லிங்காங்கசையோகமாக இருந்ததென்று அறிவிக்கும், மிக்க சத்திய சுத்தமும்—சிறந்த சத்திய சுத்த வித்தியாதீட்சையும், ஆய எழுவகை நெறியின்—ஆகிய இவ் எழுவகை தீக்ஷா நெறியினுல், ஆவி இடை இலகும்

---

[1] சடுலிங்கம்:—ஆசாரலிங்கம், குருலிங்கம், சிவலிங்கம், சங்கமலிங்கம், பிரசாதலிங்கம், மகாலிங்கம் என்பன.

[2] ஆறங்கம்:—பக்தன், மகேசன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், ஐக்கியன் என்பன.

அரன்-(இவ் ஏழையும் பெற்ற வீர விசேஷனுடைய) ஆன்மாவாகிய பிராணனிடத்தில் பிரகாசிக்கும் அரனே! அபிடேகம் ஆடியருள் என்றபடி.

வீர விசேடருக்குச் செய்யப்பெறும் பிராணலிங்கதீக்ஷை ஏழையும் உணர்த்தினரென்த, அவையாவன:--நிர்ச்சஞ்சார, நிட்பிராண, தத்துவ, அத்தியான்மீக, அனுக்கிரக, சத்ய சுத்த, வித்தியாதீக்ஷைகள் என்பன.

உணர்த்துதத்துவம், பார் என்னும் ஆன்மிகம் சிவமயமென்னும் சத்திய தத்துவம் என மூன்றிடத்தும் பிறவினையாகக்கூறியிருத்தலானும், அதுவே பொருந்துமாதலானும் ஏனைய நான்கிடத்தும் பிறவினையாகவே பொருள் கூறப்பட்டது. (7)

கிடைத்தசிவ லிங்கமன் றுணராத வேகாக்
கிரசித்த மென்னும்விரதம்
கெடாததிட விரதம்விட யங்கள்சிவ னுக்குதவு
கின்றவிங் திரியார்ப்பிதம்
உடற்றியுயிர் கொன்றிடா நின்றிடு மகிஞ்சைசீவ
னுண்மைகொ ளிலிங்கநிசமே
யுயர்சிவத் துளமடங் குறுமனே லயமதனி
லொன்ருகி நின்றுபேதம்
விடுத்தலுறு சத்தியோன் முத்தியெனு மிவையேழு
மிக்ககுரு வருள்புரியவே
மேவலரு மெய்ஞ்ஞான பாவநிலை மேவியிடும்
வேதமுடி யாவுமுணரா
தடுத்தமன மொழியுடற் கப்புறப் படுமமல
னபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

இதன் பொருள்;— கிடைத்தசிவலிங்கம் அன்று — ஆசாரியரருளால் கிடைக்கப்பெற்றுக் கரதலத்தில் எழுந் தருளியுள்ள இஷ்டலிங்கத்தையன்றி, உணராத — (வேறொரு தெய்வத்தையும்) நாடாமலிருப்பதாகிய, விரதம் என்னும்—விரதம் பூண்டு அவ்விலிங்க வுண்மையை இடைவிடாது நோக்குதலென்னும், ஏகாக்கிரசித்தம்— ஏகாக்கிரசித்தவிரதம்—இவ்வாறு மேற்கொண்ட விரத நிய மங்களை உடலுள்ளவரையும் கெடாது பாதுகாத்தலாகிய திடவிரத தீக்ஷையும், விடயங்கள் சிவனுக்கு உதவுகின்ற— பஞ்சேந்திரியங்களுக்குப் புலனாகின்ற விடயங்களதையும் சிவபெருமானுக்கே யுரியனவாகுக எனக் கொடுக்கின்ற, இந்திரியார்ப்பிதம்—இந்திரியார்ப்பித தீக்ஷையும், உடற்றி உயிர் கொன்றிடா—(காரணம் பற்றியாயினும், அசதியினா லாயினும்) கோபித்துப் பிறவுயிரைக் கொல்லுதலும், கொல்வித்தலும் செய்யாது, நின்றிடும்—(அகிஞ்சை என் னும் அருள்நிலையில்) ஊன்றி நிற்றலாகிய, அகிஞ்சை—அஹி மிசா தீக்ஷையும், சிவன் உண்மை கொள் இலிங்கநிசம்— (தோற்றமும் ஒடுக்கமும் இல்லாத) சிவன்ருனென்றறிவ தாகிய இலிங்க நிச தீக்ஷையும், உயர்சிவத்து உளம் அடங் குறும் மனோலயம்—உயர்ந்த அச்சிவலிங்கத்தின் கண்பா வனையில் லயித்து மனம் திரும்பாதிருக்கின்ற சமாதியாகிய மனோலய தீக்ஷையும், அதனில் ஒன்ருகி நின்று—அச்சிவ லிங்கத்தின்கண் இலிங்கமுந்தானும் இரண்டறக் கலந்து நின்று, பேதம்விடுத்தல் உறும்—பேதபாவனையை விடுத்து ஐக்கிய நிலையைப்பொருந்தும், சத்தியோன்முத்தி—சத்தி யோன் முத்தி தீக்ஷையும், எனும் இவை ஏழும்—என்று ஆக்மங்களிற் கூறப்படும் ஏழுவகை தீக்ஷையையும், மிக்க குரு அருள்புரிய—சிறந்த ஞானாசிரியர் செய்தருள, மேவல் அரும்—அடைதற்கரிய, மெய்ஞ்ஞான பாவநிலை மேவி யிரும்—(காரணதனுவில்) மெய்ஞ்ஞானமாகிய பாவலிங்க நிலையைப் பொருந்தியிருக்கும், வேதமுடியாவும் உண ராது—நான்கு வேதங்களின் முடியாகிய உபநிடதங்களனைத் தாலும் உணரப்படாமல், அடுத்த மனம் மொழி உடற்கு— தொடர்புற்ற மனம் வாக்குக் காயங்களுக்கு அப்புறப்படும்

அமலன்–அப்பாற்பட்டு விளங்கும் நின்மலனாகிய இறைவனே! அபிடேகம் ஆடியருள்–அபிடேகம் ஆடியருள்வீராக என்றபடி.

ஆசிரியர் வீரநிராபாரருக்குக் காரண தனுவின்கண் செய்யப்பெறும் பாவலிங்க தீக்கை யேழையும் இதன்கண் கூறினாராயிற்று.

அவை :–– ஏகாக்கிரசித்தம், திடவிரதம், இந்திரியார்ப்பிதம், அகிஞ்சை, இலிங்கநிசம், மனோலயம், சத்தியோன் முத்தி என்பன. வீரநிராபாரம் பரம், சரம், சுயம் என மூவகைப்படும். பரமாவது மூவகை தீக்கையும் சங்கம தீக்கையும் பஞ்ச முத்திரையும் பெற்றுத் திருவோடேந்தி பிச்சையேற்று உண்டு கானில் வசிப்பது. சரமாவது மேற்கண்ட முறைப்படி ஆசாரியாபிடேகம்பெற்று தீக்ஷை முதலியன செய்தற்கு அதிகாரம் பெற்றுச் சரித்தல். சுயம், ஒருவர் கட்டி கொடுத்த மடத்திற்றங்கி சமயாசாரம் விடாது அடியார்க்கு உபசரி திருத்தல்.

---

**நல்லதில நெய்யாடி யானிடத் தைந்தாடி**
**நவையிலே யமுதமாடி**
**நல்குகா ரணகாரி யம்முறையி னன்றியே**
**நறுநெய்பா றயிராடியே**
**மெல்லமலர் மதுவாடி யின்கழைச் சாறுடி**
**மென்பழச் சாறுடியே**
**விழையுமிள நீராடி யாரக்கு ழம்பாடி**
**விதியினமை தபனமாடி**
**யொல்லேநகு வெண்டலேப் புழையினிடை யோடிநல்**
**லுத்திகொடு பைத்ததலேய**
**வுரகநுழை வுறவிளங் குழவிமதி யொருபுடை**
**யொதுங்கவிட மின்றியசைய**

**வல்லலற நிறைகங்கை யசையாது நிற்பைநீ**
**யபிடேக மாடியருளே**
**யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மார்ந்தவிறை**
**யபிடேக மாடியருளே.**

இதன் பொருள்:—நல்லதில நெய் ஆடி—நல்ல எண்ணெய்யை அபிடேகம்செய்து, ஆன் இடத்து ஐந்து ஆடி—பசுவினிடத்துத்தோன்றும் பஞ்சகவ்வியத்தை யபிடேகம் செய்து, நவைஇல்ஐயமுதம் ஆடி—குற்றமில்லாத பஞ்சாமுதத்தை அபிடேகஞ்செய்து, நல்கு—கொடுத்த (ஒன்றிலிருந்து ஒன்று உண்டாகிய), காரண காரியம் முறையின் அன்றி—காரணகாரிய முறைப்படியல்லாது, நறு நெய் பால் தயிர் ஆடி—நறுமணமுள்ள நெய்யினையும் அதன்பின் பாலையும் அதன்பின் தயிரையும் அபிடேகம்செய்து, மெல்ல மலர் மது ஆடி—மென்மையான மலரினின்றும் தொகுக்கப்பெற்ற தேனை அபிடேகம்செய்து, இன்கழைச்சாறு ஆடி—இனிமையான கருப்பஞ்சாற்றை அபிடேகஞ்செய்து, மென்பழச்சாருடி—மென்மையாகக் கனிந்தமுக்கனி முதலிய பழச்சாற்றை அபிடேகஞ்செய்து, விழையும் இளநீர் ஆடி—விரும்பத்தகும் தெங்கின் இளநீரை அபிடேகம் செய்து, ஆரக்குழம்பு ஆடி—சந்தனக்குழம்பினை அபிடேகம் செய்து, விதியின் அமை தபனம் ஆடி—ஆகம விதிப்படி முன்னரே அமைத்துவைத்துள்ள தபனகலசநீரை அபிடேகம்செய்து, நல்உத்திகொடு பைத்த தலைய உரகம்—நல்ல கரும்புள்ளிகள் பொருந்திய வளைவான படத்தினையுடைத்தாகிய தலையையுடைய பாம்பு, நகு வெண்தலைப்புழையினிடை—சிரிக்கின்ற வெண்மையாகிய பிரம கபாலத்தின் துளையின்கண், ஒல்லை ஓடி நுழைவுற—விரைவிற்சென்று நுறைந்துகிடப்ப, இளம்குழவி மதி—மிக இளமையாகிய பினுறச்சந்திரன் ஒருபுடை—ஒருபக்கத்தாயினும், ஒதுங்க இடமின்றி அசைய—ஒதுங்குதற்கு இடமில்லாது அசைவுற்று நிற்க, அல்லல்அற—(உலகம்) துன்பத்தினின்றும் நீங்க, நிறைகங்கை அசையாது நிற்பை—நிறைந்த கங்கை அசைவின்றி (நிற்கும்படி அதனைத் தலைமேற்றுங்கி) நிற்

கின்றனே, நீ-(ஆதலால்) நீ, அபிடேகம் ஆடியருள் என்றபடி.

'நல்லதில நெய்' என மிகுத்துக் கூறியவதனுல் தயிலாபிடேகத்திற்குமுன் சாமானிய அர்க்கிய நீரபிடேகமும், பின் மா, மஞ்சள், நெல்லி, முள்ளிகளின் அபிடேகமும் செய்யவேண்டும் எனவும், 'விழையுமிளநீர்' என்று சொல்லியவதனுல் இளவெந்நீர், குசோதகம், ரத்திேனுதகம், சொர்ேனுதகம், சகஸ்திர தாராபாத்திரநீர் முதலிய அபிடேகமும் செய்யவேண்டுமெனவுங் கொள்ள இடந்தந்ததென்றறிக.

'அல்லலற நிறை கங்கை அசையாது நிற்பை' என்பதற்கு, பகீரத்ன் தவத்திற்கு இரங்கி, அவனது துன்பம் நீங்க நிறைந்த கங்கையை யேற்று வேண்டும்போது வேண்டியவளவாகக் கொடுத்துதவுதற்கு அசையாது நிற்பாய் எனவும், இனி கற்புடைய கங்கைக்கு உமாதேவியைப்போல் பிரிவால் நேரும் துன்பம் நீங்க, சிரத்தைவிட்டுப் பிரிந்து அசைவுருமல், அவளதன்பிற் கிசைந்து தாங்கி நிற்பாய் எனவும், என்றும் கங்கையைச் சுமந்தும் அதனுல் வரும் பாரம் நீங்க அசைவற்று நிற்பாய் எனவும், உரகம் நுழைவுற மதியசைய நிறைந்த கங்கை அலேவீசி அடிக்கவும் அதனுல் வரும் துன்பம் நீங்க அசையாது நிற்பாய் எனவும், அறம் நிறை கங்கை-இல்லற வாழ்க்கையில் நிறைந்த கங்கையை, அல் அல்-பேரிருளாய் வாராநின்ற சர்வ சங்கார காலந்தோறும், அசையாது நிற்பை-கங்காதரன் என்னும் பெயர் நீங்காதபடி தாங்கி நிற்பாய் எனவும், நிறை கங்கை-என்றும் வற்ருது நிறைகின்ற கங்கையானது, அல்அலற-பகலிலன்றி இரவிலும் ஒலிக்கவும், அசையாது நிற்பை-தலே நடுக்கமின்றி நிற்பாய் எனவும், நான் அபிடேகம் செய்யும்பொழுது நினது முடியின்மேல் விழும் நீர்த்திரளுக் கஞ்சி உரகம் வெண்டலேப் புழையினிடை நுழைவுறவும், குழவிமதி ஒதுங்க இடமின்றியசையவும் நேர்ந்த அல்லல் அடியேனுல் நேர்ந்ததென அறிந்திருந்தும், அல்லல்அற- அத்துன்பம் நீங்க், நிறைகம், கை அசையாது-வளப்பம் நிறைந்த சிரமும் கையும் அசையாமல் (சிரக்கம்பமும், கரக்கம்பமும் செய்யாமல்) நிற்பை-நிற்பாய்; அதாவது வியப்பாலும் வெறுப்பாலும் சிரக்கம்பமும், கரக்கம்பமும் உண்டாமாதலின் நான் ஆகமப்

படி அபிடேகம் செய்யும்பொழுது, வியப்பும், வெறுப்பும் தோன்று தற்கு இடமின்மையின், சிரக்கம்பமும் கரக்கம்பமும் செய்யாது நிற்பா யல்லை; நாமுரைத்த ஆகமநூல் வழியே அபிடேகம் பண்ணினு னென்று ஏற்றுக்கொள்பவனுதலின் என்க எனவும் கண்ணழித்துப் பொருள் கூறுவாருமுளர்.

அபிடேகம் செய்யும் முறை வெவ்வேறு நூல்களில் பலதிறப்பட ஆகமபேதம் கருதியோ வரன்முறை மறையத் தழுவியோ, செய்யு ளின் யாப்பிற் கிசையவோ வேறெக்காரணம் பற்றியோ நோக்குவார் கலக்கமுற்று ஒருவழிப்படாவண்ணம் கூறப்பட்டுள்ளது. இந்நூலா சிரியராகிய முனிவர் பெருந்தகையார், வடநூற்கடலையும், தமிழ்நூற் சுவையையும் நிலைகண்டு உணர்ந்தவராதலினுலும், தான் மேற் கொள்ளுவதொன்றைப் பல்லாற்ருலும் ஆராய்ந்து யாரும் ஏற்கும் முறையில் துணிந்துரைக்கும் பேராற்றலுடையராதலினுலும், தாம் கூறுவதொன்றினைப் பிற்காலத்தார் கொண்டு கூட்டுப்பொருள் கோள் முதலிய இலக்கணம்பற்றி எண்ணியவாறு பொருள் கொள்ளாவகை நேர்ந்துழியெல்லாம் நிரல்படக்கூறிச்செல்லும் தன்மையுடையராதலி னுலும், அபிடேகஞ் செய்தற்கேற்ற பொருள்களுள் இன்றியமையா தன இவையெனவும், இம்முறையே அபிடேகஞ் செய்யும் முறை யெனவும் இச்செய்யுளானும், பிரபுலிங்கலீலை மாயை பூசை கதி 43–ஆம் செய்யுளானும் வற்புறுத்தியருளினுரென்க. இவை "தான் நாட்டித் தனுது நிறுப்பு என்னும் உத்தி. (9)

நரர்கடமி னரசரவர் தமினினிய திவவியாழ்
நண்ணுநர கந்தருவர்தா
நவிலுமவர் திமினமர கந்தருவ ரவர்தம்மி
ஞடரிய தேவ ரவரிற்
சுரரதிப னவனினுயர் சுரர்குரவ னவனினயன்
சொன்முறையி னூறுமடிமேற்
றுன்னுசுக மொருதிவலை யளவுமின் ருகமிகு
சுகவேலை புகலீகுவாய்

தரைமுதற் பூதங்கள் புத்திகுண தத்துவம்
தகுதிபெறு பகுதிபுருட
தத்துவம் வித்தைமுத லனவெனுமி வற்றிலறு
சமயரென வெமைவிடாம
லருளினினே யடைதலுறு மரியபத மருளுமவ
னபிடேக மாடியருளே
யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்ற மார்ந்தவிறை
யபிடேக மாடியருளே.

இதன் பொருள்:—நரர்கள் தம்மின்– மனிதர்களினும் அரசர்–அரசரும், அவர்தம்மின்-அவ்வரசர்களிலும், இனிய திவவியாழ் நண்ணும்–இனிமையான முறுக்காணியுடைய யாழிசை பயிலும், நரகந்தருவர்–மனித கந்தருவரும், நவிலும் அவர்தம்மின்–சொல்லப்படும் அம்மனித கந்தருவ ரினும், அமர கந்தருவர்–தேவகந்தருவரும், அவர்தம்மின்– அவரினும், நாடரியதேவர்–நாடுதற்கரிய தேவர்களும், அவ ரின்–அவரினும், சுரர் அதிபன்–தேவர்களுக்குத் தலைவனு கிய தேவேந்திரனும், அவனின்–அவனினும் உயர்சுரர் குரவன்–யாவரினும் உயர்ந்த தேவகுருவாகிய வியாழ முனியும், அவனின்–அவனினும், அயன்–பிரமனும், சொல் முறையின்–மேலே சொல்லப்பட்ட வரிசைப்படி, நூறுமடி மேல்–நூறு நூறு மடங்கு மேன்மையுற்றவராவர், துன்னு சுகம்–ஆனல் அவர்கள் அடையும் சுகமோ, ஒரு திவலை யளவும் இன்ருக–(நினது நித்திய இன்பத்துடன் ஒப்பிட்டு நோக்க) ஒரு துளியளவும் இன்ருகமுடிய, மிகுசுக வேலை புகல் ஈகுவாய்– எவற்றினும் உயர்ந்த சிவானந்தப் பெருங் கடலுள் புகுதலாகிய முத்தியை அடியவர்க்குக் கொடுத் தருள்பவனே!, தரைமுதல் பூதங்கள்–நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களையும், புத்தி, குண, தத்து வம்–புத்தி, குணம் என்னும் இவ்விருவகைத் தத்துவங்களை யும், தகுதிபெறு பகுதி புருட தத்துவம்–தகைமைபெற்ற பிரகிருதி புருடன் என்னும் இவ்விருவகைத் தத்துவங்களை யும், வித்தை முதலான–வித்தியாதத்துவம் முதலியவற்றை

யும், எனும் இவற்றில்—பிறவுமென வாதிக்கும் இக்காரணத்தால், அறுசமயர் என—அறுவகைப்பட்ட சமயத்தாரைப் போல, எமைவிடாமல்—எம்மையும் புறம்பாகக் கருதி விட்டுவிடாமல், அருளின் நினை அடைதலுறும்—நினது அருட்சத்தியால் நின்னை அடையப்பெறும், அரியபதம்—அடைதற்கரிய பதத்தினை, அருளுமவன்—கொடுக்குங் கருணை வள்ளலே!, அபிடேகம் ஆடியருள் என்றபடி.

"ஆசிரியர் நரர்கள் தம்மில்......மிகுசுகவேலை புகலீகுவாய்'' என்னும் தொடரால் சிவானந்தத்தின் உயர்வையும், "தரைமுதல் ...... அருளினை அடைதலும் அரிய பதம்'' என்னும் தொடரால் சைவ அருள் நெறியின் சிறப்பையும் விளங்க உணர்த்தினுராயிற்று.

இது வேதாகம நூல்களின் அருமருந்தன்ன கருத்துக்களை உட்கொண்டு, அன்பு நிலை, அருணிலைகளை விளக்கும் ஆடியன்ன அருள்நூலாக விளங்கலின், சிவார்ச்சனை புரிந்து, சிவாநந்தத்தில் திளைக்க விரும்பும் பெரியாரனைவராலும் பொன்போற் போற்றத்தகுந்தது என மேற்கொண்டு சிவாசார சீலரனைவரும் இதனை நாடோறும் ஓதியுணர்ந்து சிவானந்தப் பெருஞ்செல்வராகுக. (10)

**ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் திருவடி வாழ்க.**

ஹனுமான் அச்சியந்திரசாலை, விழுப்புரம்.